# செயலாற்று மதிப்பு அறிக்கை

# 2010

# கமநல அபிவிருத்தித் திணைக்களம்


இல. 42,
சேர் மார்க்கஸ் பெர்னாந்து மாவத்தை,
த.பெ. 537,
கொழும்பு 07.

# கமநல அபிவிருத்தித் திணைக்களம்

## எங்கள் நோக்கம்

*இலங்கையில் உள்ள விவசாய சமூகம் மற்றும் சகல விவசாய நிலங்களின் சட்ட ரீதியான நிலையான அபிவிருத்தி.*

## பணிகள்

*இலங்கையின் விவசாயப் சமூகங்களின் செழிப்பான அபிவிருத்தியிலும் சகல விவசாய நிலங்களின் செழுமையான அனுகூலங்களைப் பெற்றுக் கொள்வதற்கு ஏற்ற வகையில் நிறுவன, உதவி, சட்ட மற்றும் முகாமைத்துவச் சேவைகள் போன்றவற்றை வடிவமைத்தல் மற்றும் சமயோசிதமான வகையில் அமுல்படுத்துதல*

**கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் ..................................**

அடையாளம் காணப்பட்ட இந் நிதி ஆண்டினுள் அரச நிறுவனமொன்று தனது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு நிறைவேற்றிய செயற்பாடுகள் மற்றும் அதன் பொருட்டு ஈடுபடுத்திய வளங்கள் தொடர்பான தகவல்கள் அந் நிறுவனத்தின் வருடாந்த அறிக்கையினுள் உள்ளடக்கப்படும்.

ஆசியாவின் ஆச்சரியத்தை நோக்கி இந் நாட்டை கொண்டு செல்லும் மஹிந்த சிந்தனை நோக்க வட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டு, கிறிஸ்துவிற்கு முன்னரான காலம் தொட்டு இந்நாட்டில் வெற்றிகரமாகக் கையாண்டு கமத்தொழிலை அடிப்படையாகக் கொண்ட, காணி மற்றும் நீர் முகாமைத்துவக் கொள்கைகளை தொடர்ந்து செயற்படுத்துவதை நோக்காகக் கொண்ட இந்நாட்டின் விவசாய பெரும் குடி மக்களுடன் கைகோர்த்து நடவடிக்கைகளை மேற்கொள்ளும் கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்குச் சொந்தமான வளங்கள் மற்றும் அதன் ஒட்டு மொத்த செயலாற்றுத் திறனை வெளிக்காட்டும் இவ் வருடாந்த அறிக்கையை வெளியிடுவதற்கு இயன்றதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

இவ்வாறான செயலாற்று மதிப்புத் திறனின் ஊடாக நாங்கள் எம்மை கொண்டு சென்ற கமநல சேவைகள் வனஜீவராசிகள் அமைச்சர் உட்பட அமைச்சிற்கும், இவ் ஆண்டில் திணைக்களத்தின் இலக்கு மற்றும் நோக்கங்களை வெற்றியடையச் செய்யும் பொருட்டு தொடர்ச்சியாக அர்ப்பணிப்புடன் கடமையாற்றிய இத்திணைக்களத்தின் சகல ஊழியர்களுக்கும் 2010 ஆம் ஆண்டின் செயற்படு திட்டத்தை உண்மையாக உருவாக்கும் பொருட்டு கைகோர்த்து செயற்பட்ட இந்நாட்டின் சகல விவசாயிகளுக்கும், கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் நிர்வாக அறிக்கையின் மூலம் எனது உள்ளார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ரவீந்திர ஹேவாவித்தாரண,**
**கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம்.**

# உள்ளடக்கம்

**பக்க இலக்கம்**


| | | |
|---|---|---|
| 1. | தாபனப் பிரிவு | 1 - 9 |
| 2. | நிறுவன அபிவிருத்திப் பிரிவு | 10 - 13 |
| 3. | அபிவிருத்தி முன்னேற்றக் கட்டுப்பாட்டுப் பிரிவு | 14 - 20 |
| 4. | நீர் முகாமைத்துவப் பிரிவு | 21 - 22 |
| 5. | சட்டப் பிரிவு | 23 - 25 |
| 6. | கணக்குப் பிரிவு | 26 - 27 |
| 7. | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு | 28 |
| 8. | விளைவுப் பெருக்க மற்றும் விற்பனைப் பிரிவு | 29 |
| 9. | கமநல வங்கி முன்னோடிக் கருத்திட்டம் | 30 - 31 |
| 10. | போக்குவரத்துப் பிரிவு | 32 |

**இணைப்புக்கள்**

# 1. தாபனப் பிரிவு

## 1.1 திணைக்களத்தின் ஊழியர்களின் எண்ணிக்கை

நாடளாவிய, இணைந்த மற்றும் திணைக்களத்திற்குரிய பதவிகள் உட்பட இத் திணைக்களத்திற்கு அனுமதிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 12019 ஆகும். 2010 ஆம் ஆண்டின் இறுதியில் சேவையில் இருந்த ஊழியர்களின் எண்ணிக்கை 10701 ஆகும். வெற்றிடமான எண்ணிக்கை 1281 ஆகும். இதற்கு மேலதிகமாக கமநல சேவைகள் வனஜீவராசிகள் அமைச்சினால் அறிக்கையிடப்பட்ட விவசாய ஆராய்ச்சி விளைவுப் பெருக்க உத்தியோகத்தர்கள் 13 பேரும், விவசாய உற்பத்தி கருத்திட்ட உதவியாளர்கள் 70 பேரும், அபிவிருத்தி உதவியாளர்கள் 89 பேரும் இத் திணைக்களத்தில் கடமையாற்றுகின்றனர். இவர்களின் விவசாய ஆராய்ச்சி விளைவுப் பெருக்க உத்தியோகத்தர்கள் அமைச்சினால் அவர்களது சம்பளத்தை வழங்கும் அடிப்படையில் இத் திணைக்களத்திற்கு அறிக்கையிடப்பட்டுள்ளனர்.

பிரதான காரியாலயத்தின் கடமைகளின் பொருட்டு கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம், மேலதிக கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் என்னும் பதவிகளும் ஆணையாளர் பதவிகள் 03 ம், பிரதி ஆணையாளர் பதவிகள் 05 ம் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆய்வு ஆண்டின் இறுதியில் இதில் 01 ஆணையாளர் பதவியும் 05 பிரதி ஆணையாளர் பதவியும் வெற்றிடமாக இருந்தது. திணைக்களத்தின் பொருட்டு 36 உதவி ஆணையாளர் பதவிகள் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், அவற்றில் 09 வெற்றிடமாக இருந்தது. இ.நி.சே. அல்லாத பிரதி ஆணையாளர் (சட்டம்) பதவி வெற்றிடமாக நிலவியதுடன், 28 அனுமதிக்கப்பட்ட திணைக்கள உதவி ஆணையாளர் பதவியில் ஆய்வு வருட இறுதியில் சேவையில் இருந்த எண்ணிக்கையினர் 05 பேராகும்.

பொது முகாமைத்துவ உதவியாளர் சேவையில் அதி விசேட வகுப்பின் வெற்றிடங்கள் 08 இருந்ததுடன், ஆய்வு வருட இறுதியில் பொது முகாமைத்துவ உதவியாளர் சேவையின் வெற்றிடங்கள் 165 ஆகும். இந் நிலை காரணமாக திணைக்களத்தின் கடமைகளை சீராகக் கொண்டு செல்வதற்காக திணைக்களத்திற்குரிய பதவிகளிலுள்ள உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பு பெற்றுக் கொள்ளப்பட்டது.

## 1.2 அலுவலக குழாமின் அலுவலக கட்டமைப்பு.

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் தலைவராக கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் அவர்கள் திணைக்களத்தின் கடமைப் பொறுப்புக்களை வெற்றிகரமாக எடுத்துச் செல்வதற்காக தேவையான செயலாற்று மதிப்புத்திறன் மட்டத்தை கொண்டு செல்வதற்கான பொறுப்புக் கூறுவதுடன், அதன் பொருட்டு தனக்கு கீழ் கடமையாற்றும் பல்வேறு மட்டத்திலான உத்தியோகத்தர்களுக்கு பொறுப்புக்களையும் அதிகாரங்களையும் வழங்கியுள்ளார்.

திணைக்களத்தின் நோக்கத்தையும் இலக்கையும் அடைவதன் பொருட்டு ஒத்துழைப்பை வழங்கிய ஆய்வு வருட இறுதியில் கடமையிலிருந்த திணைக்களத்தின் அனுமதிக்கப்பட்ட பல்வேறு பதவிகளுக்குரிய ஊழியர்களின் எண்ணிக்கை கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

## கமநல அபிவிருத்தித் திணைக்களம்
## 31.12.2010 ஆந் திகதிக்கு சேவையில் இருந்த ஊழியர்களின் எண்ணிக்கை

| இலக்கம் | பதவி | சேவை | அனுமதிக்கப் பட்ட எண்ணிக்கை | தற்போதுள்ள எண்ணிக்கை | வெற்றிடமாக வுள்ள எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 01 | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் | இ.நி.சே. விசேட | 01 | 01 | - |
| 02 | மேலதிக ஆணையாளர் நாயகம் | இ.நி.சே. | 01 | 01 | - |
| 03 | ஆணையாளர் | இ.நி.சே. I | 03 | 02 | 01 |
| 04 | பிரதி ஆணையாளர் | இ.நி.சே. | 08 | 03 | 05 |
| 05 | உதவி ஆணையாளர் | இ.நி.சே. III | 36 | 27 | 09 |
| 06 | பிரதி ஆணையாளர் (சட்டம்) | இ.நி.சே. அல்லாத | 01 | - | 01 |
| 07 | பிரதான கணக்காளர் | இ.க.சே. I | 01 | 01 | - |
| 08 | கணக்காளர் | இ.க.சே. | 06 | 07 | |
| 09 | பொறியியலாளர் | இ.பொ.சே. I | 11 | 09 | 02 |
| 10 | உதவி ஆணையாளர் | திணைக்கள | 28 | 05 | 23 |
| 11 | கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் | திணைக்கள | 610 | 483 | 127 |
| 12 | மொழி பெயர்ப்பாளர் சேவை | இணைந்த | 02 | - | 02 |
| 13 | பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை(வி) | இணைந்த | 10 | 02 | 08 |
| 14 | கமக்காரர் வங்கி கருத்திட்ட உதவியாளர் | திணைக்கள | 100 | 51 | 49 |
| 15 | சட்ட உதவியாளர் | திணைக்கள | 25 | 12 | 13 |
| 16 | வரவு செலவு உதவியாளர் | - | 01 | 01 | - |
| 17 | படவரைஞர் | திணைக்கள | 01 | 01 | - |
| 18 | இயந்திர வேலை அதிகாரி | திணைக்கள | 02 | 02 | - |
| 19 | இலங்கை தொழிற் நுட்ப சேவை | இ.தொ.சே. விசேட | 13 | 08 | 05 |
| | | இ.தொ.சே. I<br>இ.தொ.சே. II | 100 | 88 | 12 |
| 20 | பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை | இணைந்த | 534 | 369 | 165 |
| 21 | பிரசார உத்தியோகத்தர் | திணைக்கள | 01 | - | 01 |
| 22 | சுருக்கெழுத்தாளர்/தட்டெழுத்தாளர் * | திணைக்கள | 47 | 20 | - |
| 23 | வெளிக்கள உதவியாளர் * | திணைக்கள | 06 | 04 | - |
| 24 | குழு எழுதுனர் | திணைக்கள | 540 | 475 | 65 |
| 25 | சாரதி சேவை | இணைந்த | 91 | 72 | 19 |
| 26 | சாரதி உதவியாளர் | திணைக்கள | 18 | 08 | 10 |
| 27 | காவலாளி | திணைக்கள | 83 | 62 | 21 |
| 28 | டோசர் இயந்திர இயக்குனர் | திணைக்கள | 17 | 17 | - |
| 29 | அலுவலக உதவியாளர் | இணைந்த | 79 | 73 | 06 |
| 30 | எக்ஸ்கேவேற்றர் இயந்திர இயக்குனர் | திணைக்கள | 04 | - | 04 |
| 31 | விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் | திணைக்கள | 9600 | 7388<br>1500 | 712 |
| 32 | சுற்றுலா விடுதி பொறுப்பாளர் | திணைக்கள | 07 | 02 | 05 |
| 33 | பயிற்றப்படாத தொழிலாளர் | திணைக்கள | 17 | 08 | - |
| | மொத்தம் | | 12004 | 10702 | 1265 |

*** வெறிதாக்கப்பட்ட சேவைகள்.**

இதற்கு மேலதிகமாக கமநல சேவைகள் வனஜீவராசிகள் அமைச்சிலிருந்து அறிக்கையிடப்பட்டுள்ள கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளின் உத்தியோகத்தர்களும் இத் திணைக்களத்தில் கடமையாற்றுகின்றனர்.

விவசாய ஆராய்ச்சி விளைவுப் பெருக்க உத்தியோகத்தர்கள் - 13

விவசாய உற்பத்தி கருத்திட்ட உதவியாளர்கள் - 70

அபிவிருத்தி உதவியாளர்கள் - 89

### 1.3 தாபன நடவடிக்கைகள்

I 2010 வருடத்தினுள் நாடளாவிய சேவைகளின் உத்தியோகத்தர்களின் மாற்றங்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

**திணைக்களத்திலிருந்து வெளியில் இடமாற்றம் பெற்றுச் சென்ற இ.நி.சே.உத்தியோகத்தர்கள்.**

| தொ. இலக்கம் | உத்தியோகத்தர்களின் பெயர் | இடமாற்றம் பெற்றுச் சென்ற திகதி | கடமை நிலையங்கள் |
|---|---|---|---|
| 01 | திரு. எம்.பீ.என்.எம். விக்கிரமசிங்க | 01.01.2010 | ஊவா மாகாண சபை |
| 02 | திருமதி. எம்.பீ. பெரேரா | 17.03.2010 | பொது சேவைகள் ஆணைக்குழு |
| 03 | திரு. எம்.பீ.டபிளியூ.ஏ. அமுனுகம | 13.05.2010 | வட மத்திய மாகாண சபை |
| 04 | திரு. ஏச்.எம்..எம்.யூ.பீ. ஹேரத் | 18.05.2010 | கொத்மலை பிரதேச செயலகம் |
| 05 | திரு.பீ.எச். சாலிய பண்டார | 30.08.2010 | கண்டி பிரதேச செயலகம் |
| 06 | திரு. கே.ஜீ. லெனரோல் | 17.11.2010 | இறப்பர் அபிவிருத்தி திணைக்களம். |

2010 ஆம் ஆண்டினுள் இ.நி.க.சே. மற்றும் இ.பொ.சே. உத்தியோகத்தர்கள் திணைக்களத்திலிருந்த வெளியில் இடமாற்றம் பெற்றுச் செல்லவில்லை.

**திணைக்களத்திற்கு இடமாற்றம் பெற்று வந்துள்ள இ.நி.சே.உத்தியோகத்தர்கள்.**

| தொ. இலக்கம் | உத்தியோகத்தர்களின் பெயர் | இடமாற்றம் பெற்று வந்த திகதி | கடமை நிலையங்கள் |
|---|---|---|---|
| 01 | திரு. எம்.யூ. நிஷாந்த | 08.02.2010 | இரத்தோட்டை பிரதேச செயலகம் |
| 02 | திரு. எம். ஜேகு | 12.02.2010 | சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் |
| 03 | திரு. ஏ.எம். ஆரீப் | 13.05.2010 | ஆட்பதிவுத் திணைக்களம் |
| 04 | திரு. என்.பீ. அமரதுங்க | 26.04.2010 | நிவித்திகல பிரதேச செயலகம் |
| 05 | திரு. டபிளியூ.எம். குணவர்தன | 13.05.2010 | பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு |
| 06 | திரு.ஆர்.எம்.கே.ஆர்.பீ. ரத்நாயக்க | 28.06.2010 | மத்திய மாகாண காணி ஆணையாளர் அலுவலகம் |
| 07 | திரு.இசட்.ஏ.எம். பயிசால் | 30.08.2010 | கேகாலை பிரதேச செயலகம் |
| 08 | திருமதி.எம்.எஸ்.ஏ.சேனாநாயக்க | 04.11.2010 | ஓபநாயக்க பிரதேச செயலகம் |
| 09 | திரு.பீ.ஜீ. சோமரத்ன | 13.12.2010 | யட்டலமத்த பிரதேச செயலகம் |

2010 ஆம் ஆண்டினுள் இ.நி.க.சே. மற்றும் இ.பொ.சே. உத்தியோகத்தர்கள் திணைக்களத்திற்கு இடமாற்றம் பெற்று வரவில்லை.

**புதிய நியமனம் கிடைத்த நாடளாவிய சேவை உத்தியோகத்தர்களின் தகவல்கள்**

| தொ. இலக்கம் | உத்தியோகத்தர்களின் பெயர் | சேவை | திணைக்களத்திற்கு அறிக்கையிட்ட திகதி |
|---|---|---|---|
| 01 | திருமதி. கே.ஏ.எஸ். சமரஜீவ | இ.நி.சே. | **01.02.2010** |
| 02 | திருமதி.ஜே.ஏ. ரவீஷா தயாரத்ன | இ.பொ.சே. | **01.07.2010** |
| 03 | திரு. எம்.எம். முனாஸ் | இ.பொ.சே. | **01.07.2010** |
| 04 | திருமதி.ஈ.எம்.ஆர்.எஸ்.ஆர். செனவிரத்ன | இ.பொ.சே. | **04.10.2010** |

திருமதி. ஜே.ஏ. ரவீஷா தயாரத்ன அவர்கள் 19.07.2010 ஆந் திகதி தொடக்கம் அரச சேவையை விட்டு விலகியுள்ளார்

II. **புதிய ஆட்சேர்ப்புக்கள்.**

- **கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி**

2009.06.13 ஆந் திகதி நடைபெற்ற திறந்த போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய 10.02.2010 ஆந் திகதி 40 பேரும் 15.07.2010 ஆந் திகதி 26 பேரும் அதன் பின்னர் 02 உத்தியோகத்தர்களுடன் 68 பேர் ஆட்சேர்க்கப்பட்டதுடன், அதில் 11 பேர் வேறு பதவிகளின் பொருட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

- **குழு எழுதுனர் பதவி**

01.08.2009 ஆந் திகதி நடைபெற்ற திறந்த போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய 10.08.2010 ஆந் திகதி 86 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டதுடன், அதில் 07 பேர் பதவியிலிருந்து விலகியுள்ளனர்.

- **சட்ட உதவியாளர்கள்**

ஆய்வு ஆண்டினுள் ஒரு உத்தியோகத்தர் திணைக்களத்திற்கு சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

- பாரியளவில் வெற்றிடமாக நிலவிய பொது முகாமைத்துவ உதவியாளர் சேவையின் பொருட்டு ஆய்வு ஆண்டினுள் உத்தியோகத்தர்கள் எவரும் அறிக்கையிடாமை திணைக்களத்தின் கடமைகளை சீராகக் கொண்டு செல்வதற்கு பாரிய தடங்கலாக இருந்தமை பற்றி விசேடமாக குறிப்பிடல் வேண்டும்.

III. **பதவியை நிரந்தரமாக்கல்**

ஆய்வு ஆண்டினுள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களின் பதவிகள் நிரந்தரமாக்கப்பட்டது.

| பதவிகள் | நிரந்தரமாக்கப்பட்ட எண்ணிக்கை |
|---|---|
| • கமக்காரர் வங்கி கருத்திட்ட உதவியாளர்கள் | 18 |
| • சட்ட உதவியாளர்கள் | 02 |

IV. **பதவி உயர்வுகள்**

ஆய்வு ஆண்டினுள் திணைக்களத்தில் இலங்கை நி.சே. III ஆம் வகுப்பின் 05 உத்தியோகத்தர்கள் II ஆம் வகுப்பிற்கும், II ஆம் வகுப்பின் 04 உத்தியோகத்தர்கள் I ஆம் வகுப்பிற்கும் பதவியுயர்வு பெற்றுள்ளனர்.

V. **பதவியை விட்டுச் செல்லல்/விட்டு விலகல்/மரணம்**

ஆய்வு ஆண்டினுள் பதவியை விட்டுச் செல்லல், விட்டு விலகல் மற்றும் மரணம் ஆகியவை ஏற்பட்ட பதவிகளின் விபரங்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

| தொடர் இலக்கம் | பதவிகள் | விட்டுச் சென்ற எண்ணிக்கையினர் | விட்டு விலகிய எண்ணிக்கை | மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01 | கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் | 03 | - | - |
| 02 | பொது முகாமைத்துவ உதவியாளர் | 01 | - | - |
| 03 | விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் | 14 | 01 | 04 |
| 04 | குழு எழுதுனர் பதவி | 01 | 01 | 01 |
| 05 | அலுவலக உதவியாளர் பதவி | 02 | - | - |

VI. **இடமாற்றம்**

நாடளாவிய சேவைகள் தவிர்ந்த இணைந்த சேவைகளிலுள்ள உத்தியோகத்தர்களின் இடமாற்ற தகவல்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

| தொடர் இலக்கம் | பதவிகள் | இடமாற்றம் பெற்றுச் சென்ற எண்ணிக்கையினர் | இடமாற்றம் பெற்று வந்துள்ள எண்ணிக்கையினர் |
|---|---|---|---|
| 01 | பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை | 26 | 21 |
| 02 | சாரதி | 04 | 04 |
| 03 | அலுவலக உதவியாளர் | 11 | 09 |

VII. **ஓய்வு பெறல்**

ஆய்வு ஆண்டினுள் அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களின் தகவல்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

| தொடர் இலக்கம் | பதவிகள் | ஓய்வு பெற்ற எண்ணிக்கையினர் | |
|---|---|---|---|
| | | ஓ.நி.ச. 2.17 பந்தியில் | ஓ.நி.ச. 2.12 பந்தியில் |
| 01 | இலங்கை நிர்வாக சேவை | 01 | - |
| 02 | இலங்கை பொறியியலாளர் சேவை | 01 | - |
| 03 | கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை | 23 | 02 |
| 04 | பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை | 15 | - |
| 05 | தொழில் நுட்ப சேவை | 03 | - |
| 06 | குழு எழுதுனர் | 23 | - |
| 07 | சாரதி | 02 | - |
| 08 | அலுவலக உதவியாளர் பதவி | 04 | - |
| 09 | காவலாளி | 03 | - |

1.4. **வினைத்திறன் காண்தடைப் பரீட்சை**

ஆய்வு வருடத்தினுள் திணைக்களத்திற்குரிய பதவிகளான கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியின் வினைத்திறன் காண்தடை பரீட்சை 11.12.2010 ஆந் திகதியும், குழு எழுதுனர் பதவியின் வினைத்திறன் காண்தடைப் பரீட்சை 18.12.2010 ஆந் திகதியும் நடைபெற்றதுடன், பெறுபேறுகள் வழங்கும் நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டுள்ளது.

இணைந்த சேவைகளின் சாரதி சேவையின் வினைத்திறன் காண் தடைப்பரீட்சை 15.09.2010 ஆந் திகதி நடைபெற்று, 14.10.2010 ஆந் திகதி பெறுபேறுகள் வழங்கப்பட்டது. அலுவலக பணியாளர் சேவையின் வினைத்திறன் காண்தடைப் பரீட்சையின் பொருட்டு உத்தியோகத்தர்கள் இல்லாத காரணத்தால் பரீட்சை நடாத்தப்படவில்லை.

1.5 **வெளிநாட்டு சுற்றுலா மற்றும் பயிற்சி**

ஆய்வு ஆண்டினுள் வெளிநாட்டு புலமைப்பரீட்சை, மகாநாடு மற்றும் வேலைத் திட்டங்களின் பொருட்டு கலந்து கொண்ட உத்தியோகத்தர்களின் விபரங்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

- விவசாய உற்பத்தி கருத்திட்ட உதவியாளர் திருமதி. அனுகா லியனகே அவர்கள் 01.01.2010 ஆந் திகதி தொடக்கம் 31.12.2011 ஆந் திகதி வரை அவுஸ்திரேலியா மெல்பர்ன் பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பு பாடநெறியை பின்பற்றுவதற்காக வெளிநாடு சென்றுள்ளார்.

- விவசாய உற்பத்தி கருத்திட்ட உதவியாளர் திரு. பீ.எம்.டீ. முனசிங்ஹ அவர்கள் 22.05.2010 ஆந் திகதி தொடக்கம் 29.05.2010 ஆந் திகதி வரை சீனா பீஜீங் நகரில் நடைபெற்ற “Quality Infrastructure for Food Safety - 2009 phase II Follow up Seminar - May 2010 மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக வெளிநாடு சென்றார்.

1.6 **ஒழுக்காற்று நடவடிக்கைகள்**

ஆய்வு ஆண்டினுள் திணைக்களத்திற்கு முறையான ஒழுக்காற்று விசாரணை நடவடிக்கைகளுக்குரிய 76 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றதுடன், அவற்றில் 12 இன் நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன. ஆய்வு ஆண்டினுள் ஒழுக்காற்று நடவடிக்கைகள் காரணமாக வேலை நிறுத்தம் செய்யப்பட்டுள்ள எண்ணிக்கை 12 ஆகும் என்பதுடன், ஓய்வூதிய நியதிக் கோவையின் 2.12 இன் பிரகாரம் இருவர் ஓய்வு பெறச் செய்யப்பட்டுள்ளது.

## 1.7 பயிற்சி மற்றும் திறன் ஆற்றல் விருத்தி

ஆய்வு ஆண்டினுள் திணைக்கள உத்தியோகத்தர்களின் திறமை, ஆற்றல் மற்றும் அறிவு விருத்தியின் முன்னேற்றம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும். இதன் பொருட்டு 25 இலட்சம் ரூபா ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டதுடன், வருட இறுதியில் ரூபா 24,45482.25 செலவு செய்யப்பட்டிருந்தது.

| பயிற்சிகள் வழங்கப்பட்ட பதவிகள் | பயிற்சி வேலைத்திட்டம் தொடர்பான விபரங்கள் | பங்கு பற்றியவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| பொது முகாமைத்துவ உதவியாளர்கள் | சிகாஸ் பயிற்சி | 100 |
| கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் (வெளிவாரி) | சேவை ஆரம்ப பயிற்சி 1 | 40 |
| கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் | சேவை ஆரம்ப பயிற்சி 2 | 40 |
| கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் | நவீன அலுவலக முகாமைத்துவம் | 02 |
| கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் குழு எழுதுனர்கள் | பதுளை மாவட்ட அலுவலகத்திற்கு அறிக்கையிடப்பட்டுள்ள கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் குழு எழுதுனர்களின் பொருட்டு நிலையக் கணக்கு நடவடிக்கை தொடர்பான பயிற்சி | 50 |
| தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகள் | கணக்காய்வு உதவியாளர் பயிற்சி | 60 |
| பொது முகாமைத்துவ உதவியாளர்கள் | சம்பள மீளாய்வு பயிற்சி | 50 |
| கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் (உள்ளக) | கணக்கு நடவடிக்கைகள் தொடர்பான பயிற்சி | 50 |
| கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் - 1வது குழு | சேவை ஆரம்ப பயிற்சி 1வது கட்டம் | 30 |
| கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் - 2வது குழு | சேவை ஆரம்ப பயிற்சி 2வது கட்டம் வெளிக்கள கல்வி சுற்றுலா - மாத்தளை | 30 |
| தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் | தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான நீர் முகாமைத்துவ பயிற்சி | 20 |
| குழு எழுதுனர்கள் - 1வது குழு | சேவை ஆரம்ப பயிற்சி | 50 |
| குழு எழுதுனர்கள் - 2வது குழு | சேவை ஆரம்ப பயிற்சி | 50 |
| கணக்காய்வு உதவியாளர்கள் | கணக்காய்வு உதவியாளர்களின் பயிற்சி | 50 |
| கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் | ஒழுக்காற்று செயல் நடைமுறை பயிற்சி | 50 |
| கணக்காய்வு உதவியாளர்கள் | கணக்காய்வு உதவியாளர்களின் பயிற்சி | 50 |
| பதவிநிலை உத்தியோகத்தர்கள் | பட்டப்படிப்பு பாடநெறி மற்றும் டிப்ளோமா பாடநெறி | 01 |
| மொனறாகலை மாவட்ட அலுவலகத்திற்கு அறிக்கையிடப்பட்டுள்ள கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் குழு எழுதுனர்கள் | நிலையக் கணக்கு நடவடிக்கை தொடர்பான பயிற்சி | 40 |
| புத்தளம் மாவட்ட அலுவலகத்திற்கு அறிக்கையிடப்பட்டுள்ள கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் குழு எழுதுனர்கள் | நிலையக் கணக்கு நடவடிக்கை தொடர்பான பயிற்சி | 90 |
| கமநல வங்கி உத்தியோகத்தர்கள் | வடகிழக்கு கமநல வங்கி உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி | 60 |

## 1.8 கலந்துரையாடல்கள்

ஆய்வு வருடத்தினுள் திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்கள், மாவட்டத்திற்குப் பொறுப்பான பிரதி/உதவி ஆணையாளர்கள்கள், பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் பங்கு பற்றுதலுடன் 09 கலந்துரையாடல்கள் மற்றும் வேறு 01 கலந்துரையாடல்களுடன் 10 கலந்துரையாடல்கள் நடைபெற்றன. அது தொடர்பான தகவல்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

| கலந்துரையாடல்கள் நடைபெற்ற திகதி | இடம் |
|---|---|
| 11.02.2010 மற்றும் 12 ஆந் திகதிகளில் | இலங்கை மன்ற நிறுவனம் |
| 13.03.2010 ஆந் திகதி | திணைக்களத்தின் பிரதான காரியாலய கேட்போர் கூடம் |
| 29.04.2010 மற்றும் 30 ஆந் திகதிகளில் | திணைக்களத்தின் பிரதான காரியாலய கேட்போர் கூடம் |
| 21.06.2010 மற்றும் 22 ஆந் திகதிகளில் | வக்வெல்ல முகாமைத்துவ பயிற்சி நிறுவனம் |
| 26.08.2010 ஆந் திகதி | பிரதான காரியாலயம் |
| 16.09.2010 மற்றும் 17 ஆந் திகதிகளில் | HARTI நிறுவனம் |
| 30.09.2010 ஆந் திகதி | திணைக்களத்தின் பிரதான காரியாலய கேட்போர் கூடம் |
| 02.12.2010 ஆந் திகதி | திணைக்களத்தின் பிரதான காரியாலய கேட்போர் கூடம் |
| 09.12.2010 மற்றும் 10 ஆந் திகதிகளில் | பிளிமத்தலாவ கிராம அபிவிருத்தி பயிற்சி நிறுவனம் |
| ஏனைய கலந்துரையாடல் | திணைக்களத்தின் பிரதான காரியாலய கேட்போர் கூடம் |

1.9 ஆய்வு வருடத்தினுள் திணைக்களத்தின் நோக்கத்தை ஈட்டிக் கொள்வதற்காக தனது பங்களிப்பை வழங்கிய நாடளாவிய சேவையின் உத்தியோகத்தர்கள் விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

### 1.9.1 **பிரதான அலுவலகத்தின் இ.நி.சே. உத்தியோகத்தர்கள்**

| தொடர் இலக்கம் | உத்தியோகத்தர்களின் பெயர்கள் | பதவி |
|---|---|---|
| 01 | திரு. ரவீந்திர ஹேவாவித்தாரண | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் |
| 02 | திருமதி. சுமித்திரா கன்னங்கர | மேலதிக ஆணையாளர் நாயகம் |
| 03 | திரு.எஸ்.எம்.ஜீ.என் தர்மசேகர | ஆணையாளர் (மனித வள அபிவிருத்தி) |
| 04 | திரு. டபிளியூ.ஏ.டீ. கருணாதிலக்க | ஆணையாளர் (சேவைகள்) |
| 05 | திரு.ஏ.எம். விஜேசிங்ஹ(ஒப்பந்த அடிப்படை) | ஆணையாளர் (அபிவிருத்தி) |
| 06 | திருமதி. கே.ஏ.எஸ். சமரஜீவ | உதவி ஆணையாளர் (தாபனம்) |
| 07 | திரு. எம்.ஏ.எல்.எஸ்.என்.கே. மந்திரிநாயக்க | உதவி ஆணையாளர் (விளைவு பெருக்கம்) |

### 1.9.2 **மாவட்ட அலுவலகங்களின் இ.நி.சே. உத்தியோகத்தர்கள்**

| தொடர் இலக்கம் | உத்தியோகத்தர்களின் பெயர்கள் | பதவி |
|---|---|---|
| 01 | திரு. என்.பீ. அமரதுங்க | உதவி ஆணையாளர், கொழும்பு |
| 02 | திரு. சந்தன குமாரசிங்ஹ | உதவி ஆணையாளர், கம்பஹ |
| 03 | திரு. ஏ.எம். ஆரிப் | உதவி ஆணையாளர், களுத்துறை |
| 04 | திரு. ஐ.கே.ஜீ. முதுபண்டா | பிரதி ஆணையாளர், கண்டி |
| 05 | திரு. கே.எம்.எல்.பீ. கெகுலந்தர | உதவி ஆணையாளர், கண்டி |
| 06 | திரு. பீ.ஜீ. சோமரத்ன | உதவி ஆணையாளர், மாத்தளை |
| 07 | திரு. டபிளியூ.எம். குணவர்தன | உதவி ஆணையாளர், நுவரஎலிய |
| 08 | திரு. டீ.எல்.கே. பியவங்ச | உதவி ஆணையாளர், ஹம்பாந்தோட்டை |
| 09 | திரு. ஜே. திக்மாதுகொட | உதவி ஆணையாளர், மாத்தறை |
| 10 | திரு. எம்.பீ. டிரன்ஜன் | உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் |
| 11 | திரு. என். சிவலிங்கம் | உதவி ஆணையாளர், மன்னார் |
| 12 | திரு. எம். ஜேகு | உதவி ஆணையாளர், வவுனியா |
| 13 | திரு. எஸ். பிரவணாதன் | உதவி ஆணையாளர், முல்லைத்தீவு |
| 14 | திரு. ஈ. தயாரூபன் | உதவி ஆணையாளர், கிளிநொச்சி |

| | | |
|---|---|---|
| 15 | திரு. ஆர். ரூஷாந்தன் | உதவி ஆணையாளர், மட்டக்களப்பு |
| 16 | திரு. டீ.எம்.என். திசாநாயக்க | உதவி ஆணையாளர், அம்பாறை |
| 17 | திரு. எஸ். புனிதகுமார் | உதவி ஆணையாளர், திருகோணமலை |
| 18 | திரு. எம்.ஏ.பீ.சீ. ஆலோக்க பண்டார | பிரதி ஆணையாளர், குருணாகலை |
| 19 | திரு. டீ.எம்.ஜீ.பீ. திசாநாயக்க | உதவி ஆணையாளர், குருணாகலை |
| 20 | திரு. டபிளியூ.ஏ.ஆர்.என்.எஸ். விஜேசிங்ஹ | உதவி ஆணையாளர், புத்தளம் |
| 21 | திரு. ஆர்.எம்.கே.ஆர்.பீ. ரத்நாயக்க | உதவி ஆணையாளர், அனுராதபுரம் |
| 22 | திரு. எம்.யூ. நிஷாந்த | உதவி ஆணையாளர், பொலொன்நறுவை |
| 23 | திரு. எஸ்.எம்.டீ.சீ. சமரசேகர | உதவி ஆணையாளர், பதுளை |
| 24 | திருமதி. எம்.எஸ்.ஏ. சேனாரத்ன | உதவி ஆணையாளர், இரத்தினபுரி |
| 25 | திரு. இசட்.ஏ.எம். பயிசால் | உதவி ஆணையாளர், கேகாலை |

### 1.9.3 திணைக்களத்தின் இ.க.சே. உத்தியோகத்தர்கள்

| தொடர் இலக்கம் | உத்தியோகத்தர்களின் பெயர்கள் | பதவி |
|---|---|---|
| 01 | திரு. எஸ். கொடிதுவக்கு | ஆணையாளர் (நிதி) |
| 02 | திருமதி. ரோனுக்கா கொழம்பகே | பிரதி ஆணையாளர் (நிதி) |
| 03 | திரு. டபிளியூ.எம்.எம்.பீ.எச். குணரத்ன | பிரதி ஆணையாளர் (நிதி) |
| 04 | திருமதி. டீ.பீ.எஸ். பிரணாந்து | உதவி ஆணையாளர் (நிதி) |
| 05 | திருமதி. எம்.ஏ.ஐ.எஸ். மஹாநாம | உதவி ஆணையாளர் (நிதி) |
| 06 | செல்வி. எம்.பீ.கே. ஜயதுங்க | உதவி ஆணையாளர் (நிதி) |
| 07 | செல்வி. ரீ.ஏ.டபிளியூ. நாராயண | உதவி ஆணையாளர் (நிதி) |
| 08 | திரு. எஸ்.பீ. காமினி | உதவி ஆணையாளர் (நிதி) |

### 1.9.4 திணைக்களத்தின் இ.பொ.சே. உத்தியோகத்தர்கள்

| தொடர் இலக்கம் | உத்தியோகத்தர்களின் பெயர்கள் | பதவி |
|---|---|---|
| 01 | திரு. ரீ.எஸ். விஜேவர்தன | பிரதான பொறியியலாளர் |
| 02 | திரு. பிரபாத் விதாரண | பொறியியலாளர் - நீர் முகாமைத்துவம் |
| 03 | திரு. ஆர்.எம்.யூ. ரத்நாயக்க | பிராந்திய பொறியியலாளர் - குருநாகலை |
| 04 | திரு. கே.எம்.பீ. கேதரகம | பிராந்திய பொறியியலாளர் - கண்டி |
| 05 | திரு. ஏ.எல்.எம். மஹீர் | பிராந்திய பொறியியலாளர் - அனுராதபுரம் |
| 06 | திரு. வசந்த அமரஆராச்சி | பிராந்திய பொறியியலாளர் - மொனறாகலை |
| 07 | திரு. எச்.ஜீ.கே. பியசாந்த | பிராந்திய பொறியியலாளர் - ஹம்பாந்தோட்டை |
| 08 | திரு. எம்.எம். முனாஸ் | பிராந்திய பொறியியலாளர் - அம்பாறை |
| 09 | திருமதி. ஈ.எம்.ஆர்.எஸ். செனேவிரத்ன | பிராந்திய பொறியியலாளர் - இரத்தினபுரி |

## 1.10 **திணைக்கள உதவி ஆணையாளர்கள் தொடர்பான விபரங்கள்**

| **தொடர் இலக்கம்** | **உத்தியோகத்தர்களின் பெயர்கள்** | **சேவை நிலையங்கள்** |
|---|---|---|
| 01 | திரு. டபிளியூ. டபிளியூ.எம். தர்மதாஸ | கேகாலை |
| 02 | திரு. ஏ.ஆர்.எல்.எம். ஜவாட் | கண்டி |
| 03 | திரு. எச்.எம்.பீ.கே. ஹேரத் | குருணாகலை (கட்டாய விடுமுறை) |
| 04 | திருமதி. டபிளியூ.ஏ.ஐ, பெரேரா | குருநாகலை |
| 05 | திரு. டீ.எம்.ஏ. திசாநாயக்க | சிலாபம் |
| 06 | திரு. டபிளியூ.எம்.எம்.பீ. பஹலகிரிபாவ | அனுராதபுரம் |
| 07 | திரு. எஸ்.ஏ.டபிளியூ. சமரசிங்ஹ | அனுராதபுரம் |
| 08 | திரு. எம்.கே.எல். சமரவீர | அம்பாறை |
| 09 | திரு. எம்.பீ. அத்தநாயக்க | மொனறாகலை |

# 2. நிறுவன அபிவிருத்திப் பிரிவு

இலங்கையின் விவசாய பெருங்குடி மக்களை சுயசக்தி உடையதான நிரந்தர பொருளாதார மற்றும் சமூக மட்டத்தில் பலம் வாய்ந்தவர்களாக பேணுவதற்குத் தேவையான வசதிகளை வழங்கும் மற்றும் நடுவராக செயற்படும் கடமைப் பொறுப்பை நிறைவேற்றும் பணியைக் கொண்ட நிறுவன அபிவிருத்திப் பிரிவு இச் செயற்பாட்டை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கத்தினூடே 2010 ஆம் ஆண்டினுள் செயற்படுத்தியுள்ளது.

1. “ கெத்தட அருண” பசளை மானிய வேலைத்திட்டத்தை செயற்படுத்தல்.
2. ஈர வலய பிரதேசங்களில் தரிசு நிலங்களை மீள பயிர்ச்செய்கையில் ஈடுபடுத்தும் தேசிய வேலைத்திட்டம்.
3. சேதனப் பசளை உற்பத்தி மற்றும் பாவனையை ஊக்குவிக்கும் வேலைத்திட்டம்.
4. தனிப்பட்ட முன்மாதிரியான வீட்டுத்தோட்டங்களை ஸ்தாபிக்கும் வேலைத்திட்டம்.
5. ஜப்பான யென் நன்கொடையின் கீழ் கிடைக்கப்பெறும் உழவு இயந்திரங்களை விநியோகித்தல் மற்றும் முகாமைத்துவம்.
6. கமநல சேவைகள் நிலையங்கள் ஊடாக விதை, நாற்றுப் பொருட்கள் மற்றும் விவசாய உள்ளீடுகளை விநியோகிக்கும் செயற்பாட்டின் இணைப்பு நடவடிக்கைகள் மற்றும் மேற்பார்வை.
7. கமநல சேவைகள் நிலைய காணி அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டம்.
8. தேசிய கமக்காரர் வாரத்திற்கு அனுசரணையாக உழவு விழாக்களை செயற்படுத்தல்.
9. தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்திக் கண்காட்சி

மேற் காட்டப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள்/கருத்திட்டங்களின் 2010 ஆம் வருடத்திற்குரிய செயற்பாடுகளின் நிலைமை பற்றி கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சாராம்சமாக காட்டலாம்.

### 2.1 கெத்தட அருண பசளை மானிய வேலைத்திட்டம் - 2010

| போகங்கள் | பசளை பெற்றுக் கொண்ட விவசாயிகளின் எண்ணிக்கை | வயல் காணிகளின் ஏக்கர் அளவு | விநியோகிக்கப்பட்ட பசளையின் அளவு | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | யூரியா | T.S.P | M.O.P | மொத்தம் |
| 2009/2010 பெ.போ. | 1,100,543 | 1,568,792.07 | 164,272.13 | 52,038.63 | 47,201.41 | 263,512.18 |
| 2010 சிறு. போ. | 785,966 | 1,109,333.27 | 111,000.86 | 40,223.07 | 35,332.01 | 186,555.94 |
| 2010/2011 பெ.போ. | 1,114,961 | 1,841,018.58 | 175,099.91 | 58,149.12 | 51,484.06 | 284,733.10 |

இவ் வேலைத்திட்டம் ஆரம்ப தொடக்கமே அதை இயக்குவதற்குத் தேவையான பௌதீக மற்றும் மனித வளங்கள் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டு மிக சவாலாக உள்ளது. மொத்தமாக ஒவ்வொரு போகத்தினுள்ளும் பத்து இலட்சத்திற்கு அதிகமான எண்ணிக்கையான விவசாயிகளுக்கு பசளை விநியோகிக்க வேண்டி ஏற்படுகின்றது எனினும், கமநல சேவைகள் நிலையங்களில் மட்டுப்படுத்தப்பட்ட ஆளணியினருடன் இச்செயற்பாட்டை வினைத்திறனான முறையில் நிறைவேற்றுவதற்கு கஷ்டமான காரியமாக உள்ளதுடன் 2010 ஆண்டினுள்ளும் பசளை விநியோக முறையில் முறைகேடுகள் அறிக்கையிடப்பட்டுள்ளது.

### 2.2 ஈர வலய பிரதேசங்களில் தரிசு நிலங்களை மீள பயிர்ச்செய்கையில் ஈடுபடுத்தும் வேலைத்திட்டம்.

2010 ஆண்டினுள் அமைச்சினால் கிடைக்கப் பெற்ற ஒதுக்கீடு - 110 மில்லியன் ரூபா

| | |
|---|---|
| செயற்படுத்தப்பட்ட மாவட்டங்களின் எண்ணிக்கை (அம்பாறை தவிர்ந்த) | 24 |
| நெற் பயிர்ச்செய்கை பண்ணப்பட்ட ஏக்கர் அளவு | 9963 |
| பயனடைந்த விவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கை | 10822 |

**(இணைப்பு 2.1)**

### 2.3 சேதனப் பசளை உற்பத்தி மற்றும் பாவனையை ஊக்குவிக்கும் வேலைத்திட்டம்.

அமைச்சினால் கிடைக்கப் பெற்ற ஒதுக்கீடு - 15 மில்லியன் ரூபா

| வி.ஆ.உ.உ. மற்றும் விவசாயிகளின் எண்ணிக்கை | பயிற்சியளிப்பதற்கு எதிர்பார்க்கும் | பயிற்றுவித்த |
|---|---|---|
| | 3000 | 57830 |

| கமநல சேவைகள் நிலையங்களின் சேதனப் பசளை உற்பத்தி அலகுகளைத் தாபித்தல் | எதிர்பார்க்கும் | தாபித்த |
|---|---|---|
| | 600 | 707 |

| | | |
|---|---|---|
| உற்பத்தி செய்யப்பட்ட சேதனப் பசளையின் அளவு | 1320000 கி.கி | 1214 மெ.தொன் |

சேதனப் பசளை உற்பத்தி பாவனையை ஊக்குவிக்கும் வேலைத்திட்டத்தை மேலும் விரிவடையச் செய்து 2011 வருடத்தில் சேதனப் பசளைக் கிராமங்களை தாபிக்கும் வேலைத்திட்டத்திற்குத் தேவையான அடிப்படை மூலப் பொருட்கள் மற்றும் உபகரணத் தொகுதிகளை கொள்வனவு செய்யும் நடவடிக்கைகளும் இவ்வருடத்தினுள் நடைபெற்றது.

அத்துடன் இரசாயன பசளைப் பாவனை 25% வீதமான அளவாகக் குறைத்து அவ்வாறு குறைக்கப்பட்ட அளவிற்காக சேதனப்பசளையை ஈடுபடுத்தி நெற் பயிர்ச்செய்கையின் பொருட்டு, கண்ட மாதிரிகளை உருவாக்கும் வேலைத்திட்டத்திற்கமைய அனுராதபுர மாவட்டத்தில் விசேட சேதனப் பசளை வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

### 2.4 தனிப்பட்ட முன்மாதிரியான வீட்டுத்தோட்டங்களை ஸ்தாபிக்கும் வேலைத்திட்டம்.

அமைச்சின் செலவுத் தலைப்பின் கீழ் கிடைக்கப் பெற்ற ஒதுக்கீடு - 27,769,401/- ரூபா.

| | |
|---|---|
| 25 மாவட்டத்தில் இலக்கிடப்பட்ட வீட்டுத்தோட்டங்களின் எண்ணிக்கை | 155187 |
| ஆரம்பிக்கப்பட்ட வீட்டுத்தோட்டங்களின் எண்ணிக்கை | 111964 |
| விநியோகிக்கப்பட்ட வீட்டுத்தோட்ட தொகுதிகளின் எண்ணிக்கை | 95259 |
| நடாத்தப்பட்ட பயிற்சி வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை | 4848 |
| பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை | 112868 |

### 2.5 ஜப்பான் யென் நன்கொடையின் வேலைத்திட்டத்தின் கீழ் உழவு இயந்திரங்களை விநியோகித்தல் மற்றும் முகாமைத்துவம்.

2KR 2008 ஜப்பான் நன்கொடைத் திட்டத்தின் கமநல சேவைகள் நிலைய அதிகாரப் பிரிவு மட்டத்தில் **தெரிவு செய்யப்பட்ட கமக்காரர் அமைப்புக்களின் உறுப்பினர்களுக்கு** தவணை அறவீடு அடிப்படையில் விநியோகிக்கப்பட்ட விவசாய இயந்திர உபகரணங்கள்.

| | |
|---|---|
| குபோட்டா இன 02 சில்லு உழவு இயந்திரங்கள் (கலப்பை மற்றும் உதிரிப்பாகங்களுடன்) | 659 |
| மிற்சுபிஷி இன 02 சில்லு உழவு இயந்திரங்கள் (கலப்பை மற்றும் உதிரிப்பாகங்களுடன்) | 345 |
| என்ஜினுடனான நீர் பம்பி | 390 |
| 4 சில்லு உழவு இயந்திரம் (கமநல சேவைகள் நிலையங்களின் பொருட்டு) | 35 |

அவற்றில் வடக்கு கிழக்கு மாகாணங்களின் கமநல சேவைகள் நிலையங்களுக்கு விநியோகிக்கப்பட்ட விவசாய இயந்திரங்கள்.

| | |
|---|---|
| 04 சில்லு உழவு இயந்திரங்கள் | 31 |
| 02 சில்லு உழவு இயந்திரங்கள் | 396 |
| நீர் பம்பி | 191 |

(இணைப்பு 2.2)

இந் நன்கொடைத் திட்டத்தின் கீழ் கிடைக்கப் பெற்ற, 5 ஐந்து இலட்சம் பெறுமதியான 02 சில்லு உழவு இயந்திரங்கள், ரூபா 250,000/- மானிய விலையின் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் முன்னைய வருடங்களில் இந் நன்கொடைத் திட்டத்தின் கீழ் திணைக்களத்திற்கு கிடைக்கப் பெற்று விநியோகிக்கப்பட்ட உழவு இயந்திரங்களின் பொருட்டு தவணைப் பண அறவீடு 2010 வருடத்திலும் நடைபெற்றதுடன், 2010 வருடத்தில் விநியோகிக்கப்பட்ட உழவு இயந்திரங்கள் மற்றும் நீர் பம்பிகளின் பொருட்டும் இவ் வருடத்திலும் அறவீடுகள் செய்யப்பட்டன. அதற்கமைய இவ் வருடத்தினுள் இடம் பெற்ற தவணை அறவீடு தொடர்பான விபரங்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறாக அமையும்.

**02 சில்லு உழவு இயந்திரங்கள்**

| | |
|---|---|
| 1992 - 2001 வரை கமக்காரர் அமைப்புக்களுக்கு வழங்கப்பட்டுள்ள உழவு இயந்திரங்களின் பொருட்டு | - 1,210,359.00 |
| 2006 ஆம் வருடத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட உழவு இயந்திரங்கள் | - 2,463,234.00 |
| 2008 ஆம் வருடத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட உழவு இயந்திரங்கள் | -10,007,546.00 |
| 2010 ஆம் வருடத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட உழவு இயந்திரங்கள் | -17,212,066.00 |
| **மொத்தம்** | **30,893,205.00** |
| | ========== |

**04 சில்லு உழவு இயந்திரங்கள்**

1989 - 2001 வரையில் கமநல சேவைகள் நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ள உழவு இயந்திரங்களின் பொருட்டு - 11,702,628.33

அத்துடன் 2010 வருடத்தில் உழவு இயந்திர உதிரிப் பாகங்கள் விற்பனையினால் - 167307.50 ரூபா அறவிடப்பட்டுள்ளது.

## 2.6 கமநல சேவைகள் நிலைய காணி அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டம்.

இதன் பொருட்டு ஒதுக்கப்பட்ட பணம் 09 மில்லியன் ரூபாயாகும். இதன் கீழ் நிலத்தைப் பண்படுத்தல், பயிர் வகைகள் நடுதல், மண் பாதுகாப்பு முறை, விசேட பயிர்ச்செய்கை மாதிரிகள் மற்றும் கால்நடை கட்டுப்பாடு போன்ற ஏனைய நடவடிக்கைகளாக மாதிரிகள் தயாரிப்பு என்ற வகையில் மொத்தமாக நிலையக் காணிகள் 350 ஏக்கரளவிலான காணிகள் இவ் வேலைத்திட்டத்தின் கீழ் செயற்பாடு மிக்க காணிகளாக உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் இதன் பொருட்டு பாரியளிலான சுய சிரமமும் வழங்கப்பட்டுள்ளது.

## 2.7 தேசிய கமக்காரர் வாரத்திற்கு அனுசரணையாக உழவு விழாக்களை செயற்படுத்தல்.

25 மாவட்டங்களிலும் உழவு விழாக்களின் பொருட்டு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு விழாக்கள் நடாத்தப்பட்டன. இவ் விழாவின் பொருட்டுத் தேவையான செலவினை குழுக்களினால் மேற்கொள்ளப்பட்டதுடன், அச் செலவுகளை தீர்த்துக் கொள்வதற்கு இயலாத குழுக்கள் தொடர்பாக மாவட்டத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட வேண்டுகோள்களுக்கமைய கமக்காரர் பொறுப்பு நிதியத்தின் மூலம் செலவுகள் மீளளிப்புச் செய்யப்பட்டது.

## 2.8 தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்தி கண்காட்சி நடவடிக்கைகள்

தேசிய சுதந்திர தினத்திற்கு அனுசரணையாக 2010 ஆம் ஆண்டு கொழும்பிற்குப் புறம்பே கண்டி மாவட்டத்தின் குண்டசாலையில் நடாத்தப்பட்ட தெயட்ட கிருள தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்தி கண்காட்சியில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கண்காட்சி நடவடிக்கைகள் மூலம், முன்னைய வருடங்களைப் போன்று மாவட்டங்களை (கண்டி, குருநாகலை, மாத்தளை, கேகாலை, கம்பஹா, இரத்தினபுரி) தொடர்பு படுத்தி இத் திணைக்களத்தின் மூலம் பொருட்காட்சிப் பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டதுடன், பிரதான காரியாலயத்தின் மேற்பார்வையின் கீழ் கண்டி மாவட்டத்திற்குப் பொறுப்பான பிரதி ஆணையாளரினால் குறித்த கண்காட்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

1. **கொவி கெதர** மற்றும் வீட்டுத் தோட்டம், கமநல சேவைகள் நிலைய மாதிரி, விற்பனை நிலையம், நாகரிக வீட்டுத் தோட்டம் (கண்டி மாவட்டத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டது.)

2. கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் சட்ட அமைப்பின் நிரூபணம் (கேகாலை மாவட்டத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டது.)

3. மண் பாதுகாப்பு நடவடிக்கையின் நிரூபணம் (கம்பஹா மாவட்டத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டது.)

4. **“கமத”** என்னும் நேரடி நாடகம் மற்றும் **கமத்** நிர்மாணம். (இரத்தினபுரி மாவட்டத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டது.)

# 3. அபிவிருத்தி மற்றும் முன்னேற்றக் கட்டுப்பாட்டு பிரிவு

## 3.1 கட்டட நிர்மாணம் மற்றும் புனரமைப்பு (கமநல சேவைகள் நிலையங்கள்)

கமநல சேவைகள் நிலைய புனரமைப்பின் பொருட்டு 40 மி.ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன், கம்பஹா, கண்டி, அம்பாந்தோட்டை, பதுளை, அனுராதபுரம், களுத்துறை, மாத்தளை, பொலொன்நறுவை, மட்டக்களப்பு, வவுனியா ஆகிய மாவட்டங்களுக்குரிய 12 கமநல சேவைகள் நிலையங்களின் தொடர் வேலைகள் மற்றும் 39 புதிய வேலைகளும் நடைபெற்றுள்ளது. இதன் பொருட்டு 39.6 மி.ரூ. செலவிடப்பட்டுள்ளது.

## 3.2 பிரதான காரியாலயம் மற்றும் மாவட்ட அலுவலகங்களில் திருத்த வேலைகள்

இச் செலவு தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்ட 15 மி.ரூபா பணத்தில் பிரதான காரியாலயத்தின் திருத்த வேலைகள், நாராஹேன்பிட்ட களஞ்சிய தொகுதி திருத்த வேலை மற்றும் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, மாத்தளை, அனுராதபுரம், பொலொன்நறுவை, நுவரஎலிய, கம்பஹா, கேகாலை, குருநாகலை, கொழும்பு, பதுளை, கண்டி, இரத்தினபுரி மாவட்ட அலுவலகங்களின் திருத்த வேலைகள் இடம் பெற்றுள்ளது. இதன் பொருட்டு 14.9 மி.ரூ. செலவிடப்பட்டுள்ளது.

## 3.3 புதிய கமநல சேவைகள் நிலையங்களை நிர்மாணித்தல்

இதன் பொருட்டு 20 மி.ரூ. ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டுள்ளது. வருடத்தினுள் 14.8 மி.ரூ. இதன் பொருட்டு செலவிடப்பட்டுள்ளது. மாத்தறை மாவட்டத்தில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட தலல்ல கமநல சேவைகள் நிலையத்தின் நிர்மாண நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டுள்ளது. இரத்தினபுரி மாவட்டத்தின் கல்தொட்ட க.சே.நி. நிர்மாண வேலைகள் மற்றும் பதுளை மாவட்டத்தின் ரம்புக்பொத்த க.சே.நி. நிர்மாணிக்கப்பட்டுள்ளது. பிரதான காரியாலயம் மற்றும் பதுளை, கொழும்பு மாவட்டங்களின் க.சே.நிலையங்களின் சிறு நிர்மாண வேலைகள் நடைபெற்றுள்ளது. (இணைப்பு 3.2)

## 3.4 அலுவலக உபகரணங்கள் மற்றும் ஏனைய தளபாடங்கள்

அலுவலக உபகரணங்கள் மற்றும் ஏனைய தளபாடங்களின் பொருட்டு 22 மி.ரூபா 2010 ஆண்டிற்கு ஒதுக்கப்பட்டது. இதனை ஈடுபடுத்தி பிரதான அலுவலக மரத் தளபாடங்கள், கணனி இயந்திரங்கள். பிரிண்டர், UPS, சிற்றூண்டி சாலை உபகரணங்கள் (பிரதான காரியாலயத்தின் பொருட்டு) நிழற்பிரதி இயந்திரம், மின் விசிறி, றோனியோ இயந்திரம், பெக்ஸ் இயந்திரம், பணப் பாதுகாப்பு பெட்டி என்பன கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இதன் பொருட்டு 21.7 மி.ரூபா செலவிடப்பட்டுள்ளது.
(இணைப்பு 3.1 மற்றும் 3.2)

## 3.5 பசளைக் களஞ்சிய நிர்மாணம்

செலவுத் தலைப்பு 281 - 2 - 2 - 8- 2104 கீழ் பசளைக் களஞ்சிய நிர்மாணங்களின் பொருட்டு 60 மி.ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

12 மாவட்டங்களில் 28 புதிய நிர்மாணங்கள் இடம் பெற்றுள்ளதுடன், 08 மாவட்டங்களில் 15 தொடர் வேலைகளுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மொத்தச் செலவு 59.6 மி.ரூபாயாகும். (இணைப்பு 3.2)

தொடர் வேலைகள் அனைத்தினதும் புதிய வேலைகள் 24 களினதும் வேலைகள் முடிவுறுத்தப்பட்டுள்ளது.

**பசளைக் களஞ்சிய நிர்மாணம் - 31.12.2010 ஆந் திகதிக்கு முன்னேற்றம்**
**செலவுத் தலைப்பு 281 - 2 - 2 - 8- 2104**
**ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு 60 மி. ரூபாயாகும்.**

| தொ. இல | மாவட்டம் | வேலைகளின் எண்ணிக்கை | பௌதீக முன்னேற்றம் % |
|---|---|---|---|
| 01 | கம்பஹா | 1 | 50-74 % |
| 02 | களுத்துறை | 1 | 0 - 24 % |
| 03 | கண்டி | 1 | 100 % |
| 04 | நுவரஎலிய | 5 | 100 % |
| 05 | அம்பாந்தோட்டை | 3 | 100 % |
| 06 | குருநாகலை | 5 | 100 % |
| 07 | அனுராதபுரம் | 3 | 100 % |
| 08 | பதுளை | 3 | 100 % |
| 09 | திருகோணமலை | 2 | 100 % |
| 10 | மொனறாகலை | 2 | 100 % |
| 11 | மட்டக்களப்பு | 1 | 0 - 24 % |
| 12 | யாழ்ப்பாணம் | 1 | 0 - 24 % |
| 13 | சிலாபம் * | 4 | 100 % |
| 14 | இரத்தினபுரி * | 2 | 100 % |
| 15 | அம்பாறை * | 1 | 100 % |
| 16 | மாத்தளை * | 2 | 100 % |
| 17 | காலி * | 2 | 100 % |
| 18 | கேகாலை * | 1 | 100 % |
| 19 | மாத்தறை * | 1 | 100 % |
| 20 | பொலொன்நறுவை * | 2 | 100 % |
| | | **43** | |

புதிய நிர்மாணம் - 28

* தொடர் வேலைகள் - 15

3.6 **சிறு நீர்ப்பாசனப் புனரமைப்பு**

சிறு நீர்ப்பாசனங்களைப் புனரமைப்பு செய்வது இத் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கமே இத் திணைக்களத்தின் பிரதான கடமைப் பொறுப்பாகவிருந்தது. 2000 கிராமிய சிறு நீர்ப்பாசனங்களின் கணிப்பீட்டிற்கமைய இலங்கையில் புராதன குளங்கள் 11257 ம், அணைக்கட்டுக்கள் 12942 ம் உள்ளன. இதனுடன் தொடர்புடைய நீர்ப்பாசனங்களின் எண்ணிக்கை அதிகளவாகும். நெற் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளின் பொருட்டு இவற்றின் பராமரிப்பு, புனரமைப்பு என்பனவற்றை கமநல அபிவிருத்தித் திணைக்களம் கடந்த 50 வருடங்களாக நிறைவேற்றுகின்றது. இருப்பினும் 2009 ஆண்டிலிருந்து அதன் பொருட்டு ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளை திறைசேரி நிறுத்தியுள்ளது. அனுபவம் மிக்க பொறியியலாளர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் குழாம் மற்றும் நீர் முகாமைத்துவ பிரிவொன்றைக் கொண்டுள்ள இத் திணைக்களத்திற்கு இச் செலவுத் தலைப்பு இல்லாமை பாரிய சவாலாக அமைந்தது. இந் நடவடிக்கையை நிறைவேற்றுவது தொடர்பான பிரச்சினைகளை ஜனாதிபதி செயலகத்தில் கலந்துரையாடியதன் பின் அதற்கு தீர்வாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சிலிருந்து ஒதுக்கீடுகளைப் பெற்றுக் கொண்டு அந் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டது. எனவே அதற்கமைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் திணைக்களத்திற்கு நேரடியாகக் கிடைக்கப் பெற்ற 220.29 மி.ரூ. ஒதுக்கீட்டைப் பெற்றுக் கொண்டு 194.29 செலவில் 665 வேலைகள் நிறைவேற்றப்பட்டது.

இதற்கு மேலதிகமாக மாவட்ட செயலாளர்கள் மூலம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் கிடைக்கப் பெற்ற 308.56 மி.ரூபா. ஒதுக்கீட்டின் கீழ் 581 வேலைகள் 268.29 மி.ரூ. செலவிடப்பட்டுள்ளது.

**பொருளாதார அபிவிருத்தி அமைச்சு - சிறு நீர்ப்பாசனங்களின் புனரமைப்பு - 2010**

| தொடர் இலக்கம் | மாவட்டம் | கிடைக்கப் பெற்ற ஒதுக்கீடு மி.ரூபா | வேலைகளின் எண்ணிக்கை | செலவு |
|---|---|---|---|---|
| 01 | கண்டி | 50.00 | 205 | 50.00 |
| 02 | பதுளை | 50.00 | 81 | 51.59 |
| 03 | கேகாலை | 32.80 | 120 | 32.79 |
| 04 | அனுராதபுரம் | 29.00 | 47 | 29.00 |
| 05 | மாத்தளை | 57.90 | 111 | 56.22 |
| 06 | கம்பஹா | 2.00 | 3 | 5.84 |
| 07 | குருநாகலை | 0.98 | 1 | 0.98 |
| 08 | நுவரஎலிய | 10.70 | 20 | 10.70 |
| 09 | வவுனியா | 13.38 | 09 | 08.06 |
| | **மொத்தம்** | 220.29 | 665 | 194.29 |

**மாவட்ட செயலாளர்கள் ஊடாக கிடைக்கப் பெற்ற ஒதுக்கீடு**

| தொடர் இலக்கம் | மாவட்டம் | கிடைக்கப் பெற்ற ஒதுக்கீடு மி.ரூபா | வேலைகளின் எண்ணிக்கை | செலவு மி.ரூபா |
|---|---|---|---|---|
| 01 | பொலொன்நறுவை | 19.00 | 23 | 10.88 |
| 02 | அம்பாந்தோட்டை | | 42 | 21.50 |
| 03 | மாத்தறை | 03.90 | 01 | 03.90 |
| 04 | குருநாகலை | 11.00 | 149 | 14.65 |
| 05 | மன்னார் | 117.80 | 27 | 86.40 |
| 06 | புத்தளம் | 15.00 | 149 | 14.65 |
| 07 | களுத்துறை | 05.52 | 24 | 04.70 |
| 08 | இரத்தினபுரி | 02.00 | 06 | 01.38 |
| 09 | மொனறாகலை | 04.80 | 11 | 04.30 |
| 10 | அம்பாறை | 09.39 | 10 | 07.25 |
| 11 | கொழும்பு | **12.37** | **85** | **12.37** |
| 12 | யாழ்ப்பாணம் | **23.31** | **16** | **22.51** |
| 13 | கிளிநொச்சி | **59.59** | **30** | **59.59** |
| 14 | வவுனியா | **20.88** | **08** | **04.76** |
| | உப மொத்தம் | **308.56** | **581** | 268.84 |

**(இணைப்பு 3.3)**

### 3.7 வெளி நிறுவனங்களுடன் நடவடிக்கைகள்

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் வரவுசெலவு ஒதுக்கீட்டின் கீழ் அபிவிருத்தி வியடங்களின் பொருட்டு கிடைக்கப் பெற்ற பணம் மற்றும் அமைச்சின் செலவுத் தலைப்புக்களின் கீழ் கிடைக்கப் பெறும் நிதிகளுக்கு மேலதிகமாக பல்வேறு கருத்திட்டங்கள் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களும் மாகாண சபைகளின் ஒதுக்கீடுகளின் கீழ் 153 வேலைகளும் நிறைவேற்றப்பட்டுள்ளதுடன், இவ் வேலைகளின் பெறுமதி 263.48 மி.ரூபாயாகும்.

**சிறு நீர்ப்பாசனங்களின் புனரமைப்பு**
**(வடக்கு கிழக்கு புனரமைப்புக் கருத்திட்டத்தின் கீழ்)**

| தொ. இலக்கம் | மாவட்டம் | நிதி ஒதுக்கீடு வழங்கும் நிறுவனம் | வேலைகளின் எண்ணிக்கை | ஒதுக்கீட்டுப் பணம் மி.ரூபா |
|---|---|---|---|---|
| 01 | வவுனியா | ENREP | 29 | 64.70 |
| | | NDO | 26 | அறிவிக்கப்படவில்லை |
| | | PSDG | 01 | 5.10 |
| | | Uthuru Wasanthaya | 08 | 6.10 |
| 02 | முல்லைத்தீவு | ENREP | 43 | 86.28 |
| 03 | யாழ்ப்பாணம் | ENREP | 16 | 21.90 |
| 04 | மன்னார் | ENREP | 20 | 69.40 |
| 05 | கிளிநொச்சி | கமக்காரர் பொறுப்பு நிதியம் | 10 | 10 |
| | | | **153** | **263.48** |

### 3.8 புத்தரிசி விழா (2010 ஏப்பிறல் 01 – 02)

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் வருடாந்தம் நடாத்தப்படும் புத்தரிசி விழா 43 வது தடவையாகவும் அனுராதபுரம் விஜய ஸ்ரீ மஹா போதி முன்னிலையில் 2010 ஏப்பிறல் 01,02 ஆம் திகதிகளில் நடைபெற்றது.

பால் பொங்கல் நடவடிக்கைகள் தொடக்கம் புத்தரிசி ஊர்வலம் ஸ்ரீ மஹா போதி வகன்சே அருகாமைக்கு அண்மித்து பூஜை நடவடிக்கைகள் வரையிலான நடவடிக்கைகள் நேரடியாக இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் ஊடாகவும் இலங்கை ஒளிபரப்புக் கூட்டுத்தாபனம் ஊடாகவும் ஒளிபரப்பு நடவடிக்கைகள் இம்முறையும் நடைபெற்றது. இலங்கை வங்கியின் அனுசரணையுடன் ரூபவாஹினி மூலம் ஒளிபரப்பு செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இம்முறை புத்தரிசி விழாவின் போது தேன் மற்றும் நெய் வழிபாடுகள் இடம் பெற்றது. ஆதி வாசிகளின் குழுவினர் தேனினால் பூஜை வழிபாடுகளை மேற்கொண்டதுடன், இரத்தினபுரி மஹா சமன் ஆலயத்தைச் சேர்ந்த பஸ்நாயக்க நிலமே அவர்களால் நெய் வழங்கப்பட்டது. விவசாய அபிவிருத்தி கமநல சேவைகள் அமைச்சர் கௌரவ மைத்திரிபால சிறிசேன அவர்கள் உட்பட அமைச்சர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் இவ் விழாவில் கலந்து கொண்டனர்.

நாட்டிலுள்ள சகல கமநல சேவைகள் நிலையங்களிலிருந்தும் ஒன்று சேர்க்கப்பட்டு கையளிக்கப்பட்ட புத்தரிசி அன்றைய தினம் அர்ப்பணம் செய்து வழிபாடு செய்யப்பட்டது. அரிசி மற்றும் பண உதவிகளை நாட்டில் சகல பாகங்களிலும் அமைந்துள்ள கமக்காரர் அமைப்புக்களினால் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

இம் முறை புத்தரிசி விழாவை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொள்வதற்கு விவசாய அபிவிருத்தி கமநல சேவைகள் அமைச்சின் கீழ் உள்ள சகல நிறுவனங்களும் வடமத்திய மாகாண சபையும் தனது ஒத்துழைப்பை வழங்கியது. பயங்கரவாத யுத்தம் இடம் பெற்றுக் கொண்டிருந்த மிகவும் அவதானமான வேளையில் நடைபெற்ற இவ் விழா பலமான பாதுகாப்பு ஏற்பாடுகளின் மத்தியில் நடைபெற்றாலும் அதிகளவிலான மக்கள் இவ் விழாவில் கலந்து கொண்டனர். பிரித் வழிபாடு மற்றும் தானம் வழங்கல் தொடர்பான சகல நடவடிக்கைகளும் அனுராதபுரம் கமநல அபிவிருத்தி மாவட்ட அலுவலகத்தின் தலைமையில் இடம் பெற்றது. நாட்டின் பிரசித்த எழுத்தாளர்களினால் எழுதப்பட்ட **“புத்தரிசி விழா”** தொடர்பான புத்தகமும் நினைவு மலராக வெளியிடப்பட்டது.

### 3.9 இயந்திரவியல் சேவைகள் வழங்கல்

**திணைக்களத்திற்குச் சொந்தமான டோசர்/எக்ஸ்கேவேட்டர் இயந்திரங்கள்**

அபிவிருத்தி மற்றும் முன்னேற்றக் கட்டுப்பாட்டுப் பிரிவுடன் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இயந்திரவியல் பிரிவு இயந்திரவியல் அதிகாரியின் மேற்பார்வையின் கீழ் செயற்படுகின்றது.

தற்போது எமது திணைக்களத்திற்குச் சொந்தமான 20 இயந்திரங்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வருடங்களில் **"ஜப்பான் யென்"** நன்கொடையின் கீழ் கிடைக்கப்பெற்றது. 2009 வருட இறுதியில் திறைசேரி ஒதுக்கீட்டில் மினி எக்ஸ்கேவேட்டர்/பொன்டுன் இயந்திரமொன்றும் பெற்றுக் கொள்ளப்பட்டது.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **வருடம்** - | **1983** | **1984** | **1985** | **1986** | **1990** | **1994** | **1997** | **1999** | **2009** | = மொத்தம் |
| இயந்திரங்களின் எண்ணிக்கை - | **01** | **01** | **06** | **02** | **02** | **05** | **01** | **02** | **01** | = **21** |

அவ்வாறு கிடைக்கப் பெற்றவைகளில் தற்போது டோசர் இயந்திரமொன்றும், ட்ரக் ஷவல் இயந்திரமொன்றும் பழுதடைந்த நிலையில் சேவையிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், தற்போது மிகுதியாகவுள்ள 19 இயந்திரங்களின் விபரங்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

1. டோசர் இயந்திரம் - **14**
2. எக்ஸ்கேவேட்டர் இயந்திரம் - **04**
3. மினி எக்ஸ்கேவேட்டர்/பொன்டுன் இயந்திரம் - **01**

**19**

2009 ஆம் வருடத்தில் கொள்வனவு செய்யப்பட்டுள்ள பொன்டுன் இயந்திரம் தவிர்ந்த ஏனைய அனைத்து இயந்திரங்களும் தற்போதைக்கு 10,000 சேவை மணித்தியால எல்லைகளைக் கடந்துள்ளதுடன், பாவிக்கப்பட்ட வருடங்களின் அளவிற்கேற்ப **இயந்திரங்களின் முழுமையான ஆயுட் காலத்தை** கடந்துள்ளது என்பது மேற்குறிப்பிடப்பட்டுள்ளவைக்கு அமைய தெளிவாகின்றது.

இருப்பினும் மிக அர்ப்பணிப்புடன், மிகுந்த சிரமம் மற்றும் கட்டுப்பாட்டுடன் பேணப்பட்டுள்ளதால், இவற்றில் **அதிக அளவிலானவையின் இயந்திரங்கள் இன்னமும் சிறந்த நிலையில்** மேலும் எடுத்துச் செல்வதற்கு இயலுமாகவுள்ளது. இயந்திர பராமரிப்பின் பொருட்டு 2010 வருடத்திற்கு ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு 10 மி.ரூ. என்பதுடன், இவ் ஒதுக்கீட்டின் அளவு இயந்திரம் ஒன்றின் புதிய சந்தை விலையை விட குறைவானதாகும். **(இவ்வாறான இயந்திரத்தின் புதிய பெறுமதி 12 – 15 மி.ரூபாயாகும்).**

**2010 ஆம் ஆண்டில் திணைக்கள டோசர்/எக்ஸ்கேவேட்டர் இயந்திரங்கள் செயற்பட்ட மாவட்டங்கள்**

| | மாவட்டம் | | இயந்திரங்களின் அளவு |
|---|---|---|---|
| 1. | அம்பாந்தோட்டை | - | **05** |
| 2. | மொனறாகலை | - | **05** |
| 3. | குருநாகலை | - | **05** |
| 4. | அனுராதபுரம் | - | **01** |
| 5. | கேகாலை | - | **01** |
| 6. | கொழும்பு | - | **02** |
| | | | **19** |

இவ் இயந்திர உபகரணங்கள் மிக இலகு விலைக்கு விவசாயிகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், அவ் விலையானது ஒரு மணித்தியால சேவையின் பொருட்டு ரூபா 500.00 தொடக்கம் ரூபா **750.00** அளவிலாகும். (பொதுவாக இவ்வாறான சேவையின் பொருட்டு மணித்தியாலத்திற்கு அறவிடப்படும் விற்பனை சந்தையின் பெறுமதி ரூபா **3000.00** தொடக்கம் ரூபா **3250.00** வரையிலாகும்.) அவ்வாறு விவசாயிகளுக்கு சேவை வழங்காத போது, வேறு அரசின் விவசாய/நீர்ப்பாசன அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் பொருட்டு ஈடுபடுத்துவதுடன், அப்போதும் அரசின் கட்டணமாக அறவிடப்படுவது **750.00** ரூபா (உச்ச) கட்டணமாகும்.

அதிக தொலைவிலுள்ள கஷ்ட நிலையில் கீழ் மற்றும் வேறு இயந்திர உபகரணங்கள் அற்ற நிலையில் சேவையின் தேவையின் பொருட்டு விவசாயிகளுக்கு இயன்றளவில் சேவையில் ஈடுபடுத்தும் இவ் இயந்திரங்கள் மூலம் 2010 ஆம் ஆண்டில் அரசிற்கு வழங்கப்பட்டுள்ள இலகு விலை அடிப்படையில் சம்பாதித்துக் கொண்ட வருமானம் ரூபா **3,910,251.01** ஆகும். பலவிதமான நிதி நிலை காரணமாகவும் ஒதுக்கீடுகள் கிடைக்கப் பெற்றிருந்தும் பணம் கிடைப்பதற்கு ஏற்பட்ட தாமதம் காரணமாக உரிய மாவட்டங்களிலிருந்து மேலும் வருமானம் கிடைப்பதற்கு உள்ளது என்பது தெரியவருகின்றது.

அதாவது அண்ணளவாக தற்போதைக்கு கிடைக்கப் பெற்றுள்ள வருமானத்திற்கமைய இயந்திரங்களின் சேவை 5214 மணித்தியாலங்கள் செயற்பட்டுள்ளது என எடுத்துக் கொண்டால், இயந்திரங்கள் செயற்பட்ட காரணத்தால் நாட்டிற்கு கிடைக்கப் பெற்றுள்ள அபிவிருத்தி வேலைகளின் பெறுமதி ரூபா 3250.00 x 5211 = ரூபா **16,945,500,000.00** அளவிலாகும். அதாவது 16 மி.ரூபாவிற்கு அதிகமாகும்.

இவ்வாறு அதிக பெறுமதியுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்ட இயந்திர, திருத்த வேலைகள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளின் பொருட்டு 2010 வருடத்தில் செலவு செய்யப்பட்டுள்ள பணம் ரூபா **8,982,668.81** ஆகும் அதாவது 9 மி.ரூபாவிற்கு அண்மித்த தொகையாகும்.
அப் பணம் செலவு செய்யப்பட்ட முறை கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

**<u>2010 வருடத்தில் டோசர்/எக்ஸ்கேவேட்டர் இயந்திர திருத்த வேலைகளின் பொருட்டு ஏற்பட்ட செலவு</u>**

| | | | ரூபா சதம் |
|---|---|---|---|
| **1.** | DAS 17 டோசர் இயந்திர திருத்த வேலை | - | 1037,137.22 |
| **2.** | DAS 26 டோசர் இயந்திர திருத்த வேலை | - | 53,950.40 |
| **3.** | DAS 27 டோசர் இயந்திர திருத்த வேலை | - | செலவு செய்யப்படவில்லை |
| **4.** | DAS 28 டோசர் இயந்திர திருத்த வேலை | - | 202,510.56 |
| **5.** | DAS 29 டோசர் இயந்திர திருத்த வேலை | - | 180,000.00 |
| **6.** | DAS 30 டோசர் இயந்திர திருத்த வேலை | - | 622,616.74 |
| **7.** | DAS 31 டோசர் இயந்திர திருத்த வேலை | - | செலவு செய்யப்படவில்லை |
| **8.** | DAS 34 டோசர் இயந்திர திருத்த வேலை | - | செலவு செய்யப்படவில்லை |
| **9.** | DAS 45 எக்ஸ்கேவேட்டர் இயந்திர திருத்த வேலை | - | 652,070.72 |
| **10.** | DAS 46 டோசர் இயந்திர திருத்த வேலை | - | 351,998.08 |
| **11.** | DAS 48 எக்ஸ்கேவேட்டர் இயந்திர திருத்த வேலை | - | 182,140.00 |
| **12.** | DAS 49 எக்ஸ்கேவேட்டர் இயந்திர திருத்த வேலை | - | 283,920.00 |
| **13.** | DAS 50 டோசர் இயந்திர திருத்த வேலை | - | 745,634.97 |
| **14.** | DAS 51 டோசர் இயந்திர திருத்த வேலை | - | 1445,099.49 |
| **15.** | DAS 52 டோசர் இயந்திர திருத்த வேலை | - | 73,158.40 |
| **16.** | DAS 53 எக்ஸ்கேவேட்டர் இயந்திர திருத்த வேலை | - | 477,852.55 |
| **17.** | DAS 54 டோசர் இயந்திர திருத்த வேலை | - | 301,088.48 |
| **18.** | DAS 55 டோசர் இயந்திர திருத்த வேலை | - | 2351,129.76 |
| **19.** | DAS 70 டோசர் இயந்திர திருத்த வேலை | - | 22,361.44 |

மேலும், தரிசு வயற் காணிகளை பயிர்ச்செய்கையில் ஈடுபடுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ் கரையோர பிரதேசங்களின் ஈர வலய பயிர்ச்செய்கை நிலங்களின் கால்வாய் மார்க்கங்களின் புனரமைப்பின்பொருட்டு அத்தியாவசிய தேவையாக இருந்த பொன்டுன் பாஜ் இயந்திரமொன்றுடன் **மினி எக்ஸ்கேவேட்டர் இயந்திரமொன்றும்** 2009 ஆம் ஆண்டு ஒதுக்கீட்டிலிருந்து 12 மி.ரூபாவிற்கு கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இவ் இயந்திரம் 2010 ஆம் ஆண்டின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் ஹோமாகம முத்தெஸ்ஸ வாய்க்கால் அபிவிருத்தியின் பொருட்டு ஈடுபடுத்தப்பட்டதுடன், அதன் மூலம் முத்தெஸ்ஸ வயற் கண்டத்ததை மீள பயிர்ச்செய்கையில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. 2010 ஆம் ஆண்டின் உழவு விழா நடைபெற்றதும் முத்தெஸ்ஸ வயற் கண்டத்திலேயாகும்.

## 2010 ஆம் வருடத்தில் கிடைக்கப் பெற்ற வருமானம்.

| | | | |
|---|---|---|---|
| 1. | அம்பாந்தோட்டை மாவட்ட அலுவலகம் | - | ரூபா 1,170,750.00 |
| 2. | மொனறாகலை மாவட்ட அலுவலகம் | - | ரூபா 315,750.00 |
| 3. | குருநாகலை மாவட்ட அலுவலகம் | - | ரூபா 1,971,000.00 |
| 4. | அனுராதபுர மாவட்ட அலுவலகம் | - | ரூபா 316,775.00 |
| 5. | கிளிநொச்சி மாவட்ட அலுவலகம் | - | ரூபா 135,976.01 |
| | | | ரூபா 3,910,251.01 |

=============

## 4. நீர் முகாமைத்துவப் பிரிவு.

இத் திணைக்களத்தில் நீர் முகாமைத்துவப் பிரிவு 1981 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. தற்போது அது நீர் முகாமைத்துவம் தொடர்பான பொறியியலாளர் ஒருவரின் தலைமையில் செயற்படுகின்றது. கைவிடப்பட்டிருந்த குளங்களை புனரமைப்பு செய்வதும் செயற்பாட்டிலுள்ள குளங்களை நவீனமயப்படுத்துதலின் மூலம் அக் குளங்களில் படிப்படியாக நீர்க் கட்டுப்பாட்டு வேலைத்திட்டத்தை செயற்படுத்துவதன் மூலம் விவசாய உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடனேயே இப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.

**தற்போதுள்ள மனித வளங்கள்:**

| | |
|---|---|
| • பொறியியலாளர் | 01 |
| • சிரேஷ்ட பொறியியல் உதவியாளர் | 02 |
| • விவசாய கண்காணிப்பு உத்தியோகத்தர் | 02 |
| • பொது முகாமைத்துவ உதவியாளர் | 03 |
| • அலுவலகப் பணியாளர் | 01 |

**2010 ஆம் ஆண்டில் நீர் முகாமைத்துவப் பிரிவின் மூலம் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள்.**

01. **தரக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் (மண் பரிசீலனை நடவடிக்கைகள்)**

| | |
|---|---|
| மாவட்டங்களின் எண்ணிக்கை | 08 |
| குளங்களின் எண்ணிக்கை | 40 |

02 **நீர் முகாமைத்துவ முன்னோடிக் கருத்திட்டம்**

| | |
|---|---|
| மாவட்டங்களின் எண்ணிக்கை | 09 |
| வேலைகளின் எண்ணிக்கை | 20 |

(குளங்களை அண்மித்த பகுதிகளின் மழை வீழ்ச்சி, நீராவியாதல், வயல் நிலங்களுக்கு நீர் வழங்கும் அளவு, காலநிலை தரவுகளைப் பெற்றுக் கொள்ளல்)

03. **கிராமிய நீர்ப்பாசனங்களின் நீரின் தரத்தைப் பரிசீலித்தல்.**

கிராமிய நீர்ப்பாசனங்களின் நீரின் தரத்தை பரிசீலனை செய்து பயிர்ச்செய்கையின் பொருட்டு நீரின் தரம் பற்றி ஆய்வறியும் வேலைத்திட்டமொன்று நாட்டின் சகல மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

04. **கிராமிய நீர்ப்பாசனங்களின் தரவுப் புத்தகங்களை அச்சிடல்.**

கிராமிய நீர்ப்பாசனங்கள் தொடர்பான விபரங்கள் அடங்கிய தரவுப்புத்தகத்தை அச்சிடும் பொருட்டுத் தேவையான அடிப்படை நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டுள்ளதுடன், இப் புத்தகத்திற்கு உள்ளடக்குவதற்கு உரிய கிராமிய நீர்ப்பாசனங்கள் தொடர்பான விபரங்கள் அடங்கிய வரைபடங்கள் பதிப்புச் செய்து அச்சிடல்.

05. **மழைமானிகளை மாவட்ட மட்டத்தில் தாபித்தல்.**

2010 ஆம் ஆண்டினுள் 135 மழைமானிகள் கமநல சேவைகள் நிலையங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

06. **நீர்ப்பாசன தரவுத் தொகுதி நிர்மாணம்**

- மாவட்டங்களின் எண்ணிக்கை – 23 (மாவட்டங்களில் அமைந்துள்ள குளங்கள், அணைக்கட்டுக்கள் தொடர்பாக கணிப்பீடு செய்தல்)
- சிறுநீர்ப்பாசன தரவுத் தொகுதிக்குரிய மென்பொருள் இதுவரையில் உருவாக்கப்பட்டு முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன், அதனை பரிசீலனை செய்யும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெறுகின்றது.

07. **UNDP நன்கொடை**

UNDP/DMC நன்கொடையின் கீழ் மொனறாகலை மாவட்டத்தில் கிந்தலிய குளத்தின் 1 ஆம் கட்ட புனரமைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

08. **Bataஅத்த குள நிர்மாணம்**

விவசாயத் திணைக்களத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் அம்பாந்தோட்டை மாவட்டத்தின் Bataஅத்த 1 ஆம் கட்ட நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

09. **புத்தகங்களைச் அச்சிடல்**

- கமநல சேவைகள் நிலையங்களில் தாபிக்கப்பட்டுள்ள மழைமானிகளின் தரவுகளை குறித்துக் கொள்வதற்காக மழைவீழ்ச்சி தரவுப் புத்தகங்கள் 700 அச்சிடப்பட்டு விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- வரண்ட வலயங்களிலுள்ள குளங்களின் உயரத்தை அளப்பதற்காக தாபிக்கப்பட்ட நீரின் உயர மானிகளின் தரவுகளை குறிப்பிடுவதற்காக குளத்தின் நீர் மட்ட தரவுகளைக் குறிக்கும் 2000 புத்தகங்களை (சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில்) அச்சிட்டு மாவட்டங்களுக்கு விநியோகம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

10. **பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்**

- இப் பிரிவின் மூலம் நிர்மாணிக்கப்பட்ட நீர்ப்பாசனத் தரவுகள் மற்றும் கமத்தொழில் காணி இடாப்பு தரவுகளை பயன்படுத்துவது தொடர்பாக மாவட்ட அலுவலர்களுக்கான பயிற்சி.

- திணைக்களத்தின் புதிய தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு அதி தொழில்நுட்ப அளவை உபகரணங்கள் பாவனை தொடர்பான பயிற்சி வேலைத்திட்டத்தை நடாத்துதல் மற்றும் வவுனியா மாவட்டத்தில் கிராமிய குளங்களின் புனரமைப்பு நடவடிக்கைகளின் கீழ் பிரயோகப் பயிற்சியை வழங்குதல்.
- திணைக்களத்தின் புதிய தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் பொருட்டு நீர் முகாமைத்துவ நடவடிக்கைகள் தொடர்பான பயிற்சியை வழங்குதல்.

# 5. சட்டப் பிரிவு.

இலங்கையின் கமத்தொழில் காணிகளில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு இலங்கை விவசாயிகளை செழிப்பான அபிவிருத்தியை நோக்கி இட்டுச் செல்லும் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் குறிக்கோளை உச்ச நிலைக்கு கொண்டு வருவதற்காக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முறைகளில் சட்டப் பிரிவு அப் பணிகளில் பங்களிப்புச் செய்கின்றது.

1. இலங்கையின் கமத்தொழில் கொள்கைகளை தயாரிப்பதற்கு கமநல அபிவிருத்திச் சட்டம், அதற்குரிய ஏற்பாடு விதிமுறைகளை தயாரிப்பதற்குத் தேவையான தகவல்களை அமைச்சிற்கு வழங்குதல் மற்றும் ஒத்துழைப்பை வழங்குதல்.

2. வாரப்பயிர்ச்செய்கையாளர்கள் மற்றும் சொந்தக் காணி உரிமையாளர்களிடையே ஏற்படும் கமத்தொழில் பிணக்குகளை தீர்த்து வைப்பதற்கான சட்ட ரீதியான வழிகாட்டல்கள்.

3. பயிர்ச்செய்கை உரிமைகளை பாதுகாத்தல்.

4. கிராமிய நீர்ப்பாசனங்களை பாதுகாத்தல் மற்றும் பயிர்ச்செய்கை விதிமுறைகளை செயற்படுத்துவதன் பொருட்டு சட்ட ரீதியான பாதுகாப்பை வழங்குதல்.

5. கமநல அபிவிருத்திச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக நீதிமன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.

5.1 **2000 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்கமுடைய கமநல அபிவிருத்திச் சட்டத்தை திருத்தம் செய்வதற்கான நடவடிக்கைகள்.**

2006 ஆம் ஆண்டு தொடக்கம் இச் செயற்பாடு செயற்படுத்தப்படுவதுடன், கமக்காரர் முகவர் நிறுவனங்கள் உட்பட பொது மக்களின் கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளைப் பெற்றுக் கொண்டு ஆய்விற்கு உட்படுத்தி புதிய சட்ட வரைவு ஒன்றை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் நடைபெறுகின்றன.

தற்போது நடைமுறையிலுள்ள 2000 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்கமுடைய கமநல அபிவிருத்திச் சட்டத்தை செயற்படுத்துவதற்குத் தேவையாகவுள்ள கட்டளைகள் அமுல்படுத்தப்படவில்லை என்பதுடன், தற்காலத்தில் மிகவும் முக்கியத்துவம் மிக்க கமத்தொழில் காணிகளை வினைத்திறமையான முறையில் பயிர்ச்செய்கையில் ஈடுபடுத்துவதற்காக சட்டத்தின் 22, 23, 25 மற்றும் 26 ஆம் பந்திகளை செயற்படுத்துவதற்கான விதிகளைத் தயாரித்து பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்து ஏற்றுக் கொள்வதற்கு தேவையாகவுள்ளதால் அதன் பொருட்டான விதிகளை வரைபு செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

5.2 **விவசாயப் பிணக்குகளைத் தீர்த்தல்**.

வாரப்பயிர்ச்செய்கையாளர்களின் உரிமைகள் மற்றும் பயிர்ச்செய்கை உரிமைகள் மற்றும் சொந்தக் காணிப் பயிர்ச்செய்கையாளர்களின் இருப்பாட்சியாளர்களின் விவசாய பிணக்குகளைத் தீர்த்தல் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் அடிப்படைச் செயற்பாடாகும்.

வாரப்பயிர்ச்செய்கையாளர்களை வெளியேற்றல் தொடர்பான முறைப்பாடுகள், காணி குத்தகைச் செலுத்தல் உதாசீனம் தொடர்பான முறைப்பாடுகள் உட்பட கமநல நியாயச் சபை மூலம் விசாரணை நடாத்தி தீர்வை வழங்கல் வேண்டும் என சட்டத்தின் மூலம் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள கமக்காரர் பிணக்குகளைத் தீர்ப்பதற்காக கமநல அபிவிருத்திச் சட்டத்தின் 39 வது பந்தியின் கீழ் தாபிக்கப்பட வேண்டிய கமநல நியாயச் சபை இதுவரையில் தாபிக்கப்படாமை பிரச்சினையாகவுள்ளது. அதற்கேற்ப கிடைக்கப் பெற்றுள்ள முறைப்பாடுகள் மாவட்ட அலுவலகங்களில் பட்டியல் படுத்தப்பட்டுள்ளதுடன், நியாயச் சபை தாபிக்கப்பட்ட பின்னர் விசாரணையின் பொருட்டு சமர்ப்பிக்கப்படவுள்ளது.

கமநல நியாயச் சபைக்கு சமர்ப்பிப்பதற்காக வைக்கப்பட்டுள்ள வேண்டுகோள்களின் எண்ணிக்கை 2010 ஆம் ஆண்டு வரை கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதிகரித்துள்ளது.

| வருடம் | வேண்டுகோள்களின் எண்ணிக்கை |
|---|---|
| 2004 | 660 |
| 2005 | 1151 |
| 2006 | 2327 |
| 2007 | 3422 |
| 2008 | 3510 |
| 2009 | 3945 |
| 2010 | 4285 |

## 5.3 விவசாயிகளின் முறைப்பாடுகள் (பொது)

**கமநல அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கிடைக்கப் பெற்றுள்ள முறைப்பாடுகள்.**

| 2010 வருடத்தினுள் | 2010.01.01 திகதிக்கு மிகுதியாவுள்ள | 2010 வருடத்தினுள் தீர்வுகள் | 2010.12.31 திகதிக்கு மிகுதியாவுள்ள |
|---|---|---|---|
| 12799 | 532 | 11209 | 2122 |

## 5.4 நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு முன்னிற்றல்.

சட்டமாதிபரின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

உயர் நீதிமன்றம் - -

மேல் முறையீட்டு நீதிமன்றம் - 08

மேல் நீதிமன்றம் - 18

மாவட்ட நீதிமன்றம் - 08

நீதவான் நீதிமன்றம் - 15

வயற்காணிகளை அனுமதியின்றி நிரப்புதல் தொடர்பாக மாவட்ட மட்டத்தில் சட்ட நடவடிக்கை எடுத்தல்.

2010 வருடத்தின் முன்னேற்றம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

1. அனுமதியின்றி நிரப்புதல்/நிர்மாணத்திற்காக தடை உத்தரவு பெற்றுக் கொண்ட எண்ணிக்கை (33 வது பிரிவு) - 357

2. குற்றத்திற்கு தண்டனை வழங்குதல் மற்றும் பழைய நிலைக்கு உருவாக்குதல் - (33 வது பந்தி) - 115

## 5.5 கமத்தொழில் காணி இடாப்புத் தொடர்பான விடயங்கள்:

கமநல அபிவிருத்திச் சட்டத்தை செயற்படுத்தும் போது மேற்படி சட்டத்தின் 53 வது பிரிவிற்கமைய கமத்தொழில் காணி இடாப்புத் தொடர்பாக விடுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளை

செயற்படுத்தல் மற்றும் அந்நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் முக்கியமான விடயமாகும். ஒவ்வொரு வருடத்திலும் இரு தடவைகள் நாட்டிலுள்ள கமநல சேவைகள் நிலையங்களிலுள்ள கமத்தொழில் காணி இடாப்புக்களை பொது மக்களின் பரிசீலனைக்காக திறந்து வைத்து அது தொடர்பாக கிடைக்கப்பெறும் வேண்டுகோள்களை பரிசீலனை செய்து பார்த்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதும் கமநல சேவைகள் குழுக்களின் கடமையாகும். மேற்படி செயற்பாட்டின் முன்னேற்றம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

**கமத்தொழில் காணிகளின் திருத்தம்:**

| 2010 வருடத்தினுள் கிடைக்கப் பெற்றவை | முன்னைய வருடங்களின் மிகுதி | விசாரணை நடாத்தப்படவுள்ள மொத்த எண்ணிக்கை | விசாரணை முடிவுற்ற | மிகுதியாவுள்ள எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| **12270** | **16549** | **28819** | **8860** | **19959** |

## 5.6 சட்ட ஆலோசனை விடயங்கள்:

திணைக்கள உத்தியோகத்தர்களை எதிராளிகளாக குறிப்பிட்டு நீதிமன்றத்தில் தொடரப்படும் வழக்குகள் தொடர்பாக சட்டமாதிபரின் ஒத்துழைப்பை வழங்குதல் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் நீதிமன்றத்திற்கு சமூகம் கொடுத்தல் போன்ற விடயங்கள் இடம் பெறுகின்றன.

சில காரணங்களின் நிமித்தம் மனித உரிமைகள் ஆணைக்குழு மூலம் தயவை எதிர்பார்ப்பவர்களின் பொருட்டு தேவையான ஒத்துழைப்பும் பெற்றுக் கொடுக்கப்படுகின்றது. நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பான பாராளுமன்ற ஆணையாளர், மனித உரிமைகள் ஆணைக் குழு என்பனவற்றின் முன் தேவையான சந்தர்ப்பங்களில் தோன்றி காரணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அவற்றின் விபரங்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகள் (2010) | 03 |
| மனித உரிமைகள் ஆணைக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகள் (2010) | 01 |
| பாராளுமன்ற செயற் குழுவிற்கு பதில் வழங்கல் (2010) | - |
| பொதுமக்கள் முறைப்பாட்டுச் செயற்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகள் (2010) | - |
| இலஞ்ச ஊழல் ஆணைக்குழு (2010) | - |

# 6. கணக்குப் பிரிவு

**2010 வருடத்தின் நிதி முன்னேற்றம்**

2010 ஆம் ஆண்டு திறைசேரி அச்சடிக்கப்பட்ட மதிப்பீட்டின் மூலம் இத் திணைக்களத்திற்கு 3,038.9 மில்லியன் ரூபா ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டது. இத் திணைக்களத்தின் செயற்படும் நிகழ்ச்சித் திட்டங்கள் இரண்டினது விடயங்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பகிரப்பட்டுள்ளது.

**மீண்டெழும் செலவுகள்:**

281 - நிகழ்ச்சித்திட்டம் 1 - 173.55 மி.ரூபா

நிகழ்ச்சித்திட்டம் 2 - 2,667.85 மி.ரூபா 2,841.40

**மூலதனச் செலவுகள்**

281 - நிகழ்ச்சித்திட்டம் - 1 32.00 மி.ரூபா

நிகழ்ச்சித்திட்டம் - 2 165.00 மி.ரூபா 197.50 மி.ரூபா

3,038.90 மி.ரூபா

**பொது வைப்புக் கணக்கிலிருந்து கிடைக்கப்பெற்ற ஒதுக்கீடு** 18.64 மி.ரூபா

**மூலதன ஒதுக்கீடு அபிவிருத்தி விடயங்களின் பொருட்டு ஈடுபடுத்தப்பட்டுள்ள முறைமை:**

| தொ. இ. | விபரம் | அனுமதிக்கபட்ட செலவுத் தலைப்பு (மி.ரூபா) | வைப்புக் கணக்கு (மி.ரூபா) | மொத்தம் (மி.ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | மாவட்ட அலுவலகம் மற்றும் கமநல சேவைகள் நிலையத் திருத்த வேலை | 55 | - | 55 |
| 02 | மாவட்ட அலுவலகம் மற்றும் கமநல சேவைகள் நிலைய நிர்மாணம் | 20 | 6.47 | 26.47 |
| 03 | இயந்திர உபகரணங்கள்/வாகனத் திருத்த வேலைகள்/கொள்வனவு (டோசர், உழவு இயந்திரம், ஏனையவை | 45 | 12.17 | 57.17 |
| 04 | அலுவலக உபகரணங்கள் மற்றும் ஏனையவை | 15 | - | 15 |
| 05 | பசளைக் களஞ்சியத் திருத்தவேலை | 60 | - | 60 |
| 06 | பயிற்சி மற்றும் ஆற்றல் அபிவிருத்தி | 2.5 | - | 2.5 |
| | **மொத்தம்** | 197.5 | 18.64 | 216.14 |

**2010 ஆம் வருடத்தின் முன்னேற்றம்:**

| தொ.இ. | விபரம் | 31.12.2010 ஆந் திகதிக்கு செலவு (மி.ரூபா) | நூற்றுவீதம் |
|---|---|---|---|
| 1. | நிகழ்ச்சித்திட்டம் - மீண்டெழும் செலவுகள் | 163.50 | 94.2 |
| | - மூலதனம் | 31.60 | 98.8 |
| | | | |
| 2. | நிகழ்ச்சித்திட்டம் - மீண்டெழும் செலவுகள் | 2,579.34 | 69.7 |
| | - மூலதனம் | 159.57 | 96.4 |
| | வைப்புக் கணக்கு | 12.91 | 69.2 |

மீண்டெழும் செலவைக் கருத்திற் கொள்ளும் இவ்விரு வேலைத்திட்டங்களிலும் அதிக பங்களிப்பை வகிப்பது 2 நிகழ்ச்சி திட்டங்களிலுமான 10,824 ஊழியர்களின் சம்பளத்திற்கேயாகும். 2010 வருடத்தில் விவசாய அமைச்சின் கீழ் ஊதியம் பெற்ற 157 உத்தியோகத்தர்கள் திணைக்களத்திற்கு அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், 72 கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் 93 குழு எழுதுனர்கள் என இதுவரையில் 322 உத்தியோகத்தர்கள் புதிதாக ஆட்சேர்க்கப்பட்டுள்ளனர்.

மூலதனச் செலவைக் கருத்திற் கொள்ளும் போது புனரமைப்பு மற்றும் மேம்படுத்தும் வேலைத்திட்டத்தின் பொருட்டு இரண்டு நிகழ்ச்சித் திட்டங்களின் கீழும் அதிக பங்களிப்பு வகிக்கப்பட்டுள்ளதுடன், புதிய நிர்மாணங்கள் மற்றும் புதிய கருத்திட்டங்களின் கீழ் பசளைக் களஞ்சிய நிர்மாணத்திற்காக 59.6 மி.ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக கமநல சேவைகள் நிலைய புனரமைப்பு நடவடிக்கையின் பொருட்டு 37.7 மி.ரூபா 2010 வருடத்தில் செலவு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் 2010 வருடத்தில் அமைச்சினால் செயற்படுத்தப்பட்ட " நாம் பயிரிடுவோம் - நாட்டைக் கட்டியெழுப்புவோம்" வேலைத்திட்டத்தில் தரிசு நிலங்களை பயிர்ச்செய்கையில் ஈடுபடுத்தல், தருண கொவி அருண, வீட்டுத் தோட்ட பயிர்ச்செய்கையை ஊக்குவித்தல், வி.ஆ.உ.உ. களின் பொருட்டு பிரயாணக் கொடுப்பனவு மற்றும் சேதனப் பசளை உற்பத்தியினை ஊக்குவித்தல் வேலைத்திட்டமும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் சிறு நீர்ப்பாசன புனரமைப்பு வேலைத்திட்டம், ஜாதிக சவிய, கம நெகும வேலைத்திட்டத்தின் கீழ் இத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டது. விவசாய அமைச்சினால் வழங்கப்பட்ட ஒதுக்கீட்டில் 82.6% ம், பொருளாதார அமைச்சினால் வழங்கப்பட்ட ஒதுக்கீட்டில் 84.4% செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் 2000 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்கமுடைய கமநல அபிவிருத்திச் சட்டத்தின் 97(3) பிரிவின் கீழ் உருவாக்கப்பட்ட கமநல அபிவிருத்தி நன்கொடையில் 2010 வருடத்தின் பொருட்டு சேர்த்துக் கொள்ளப்பட்ட வருமானம் 47.09 மி.ரூபாயாகும். அதில் 31.12.2010 ஆம் வருடத்தில் அறிமுகமாகிய 9 தலைப்புக்களின் கீழ் 34.17 மி.ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.

## 7. உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள்.

2010 வருடத்தில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்கு அனுமதிக்கப்பட்ட அலுவலக ஆளணியினர் 14 என்பதுடன், தற்போது பிரதான காரியாலயத்தின் உள்ளக கணக்காய்வுப் பிரிவிற்கு அறிக்கையிட்டுள்ள உத்தியோகத்தர்கள் 13 பேர் கடமையாற்றுகின்றனர். மாவட்ட அலுவலகங்களில் கடமையாற்றும் 36 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாய கருத்திட்ட உதவியாளர் உத்தியோகத்தர்கள் அவர்கள் கடமையாற்றும் மாவட்ட அலுவலகங்களில் உள்ளனர் என்பதுடன், கணக்காய்வுப் பிரிவினால் விடுக்கப்படும் கடமைகளிலும் ஈடுபடுகின்றனர்.

2010 ஆம் ஆண்டினுள் பிரதான காரியாலயம், குழு மற்றும் கமநல வங்கி என்பனவற்றை உள்ளடக்கும் வகையில் 125 விசாரணைகள் நடைபெற்றுள்ளன. விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

2010 வருடத்தினுள் 119 கணக்காய்வு அதிபதியின் கணக்காய்வு ஐயவினாக்கள் கிடைக்கப் பெற்றுள்ளதுடன், இவற்றில் 13 வினாக்களுக்கு இவ்வருடத்தினுள் பதில் வழங்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| பிரதான அலுவலகம் | - | 01 |
| அனுராதபுரம் | - | 10 |
| களுத்துறை | - | 10 |
| அம்பாந்தோட்டை | - | 07 |
| மொனறாகலை | - | 11 |
| கண்டி | - | 11 |
| கம்பஹா | - | 03 |
| காலி | - | 02 |
| மாத்தறை | - | 08 |
| அம்பாறை | - | 05 |
| பதுளை | - | 08 |
| இரத்தினபுரி | - | 05 |
| கேகாலை | - | 04 |
| நுவரஎலிய | - | 08 |
| குருநாகலை | - | 24 |
| புத்தளம் | - | 05 |
| கொழும்பு | - | 03 |
| | | ----- |
| | | 125 |
| | | === |

## 8. விளைவுப் பெருக்க மற்றும் விற்பனைப் பிரிவு.

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் முதன்மை விடயமான கமத்தொழில் காணி முகாமைத்துவம் இப் பிரிவின் பிரதான கடமையாகும். அதற்கமைய கமத்தொழில் காணிகளின் பொருட்டு சிறந்த முகாமைத்துவ முறைமையொன்றை அறிமுகப்படுத்தி அதன் மூலம் உச்ச அறுவடையை நாட்டிற்கு வழங்குவது இப்பிரிவின் முதன்மை இலக்காகும்.

இதற்கமைய வினைத்திறமையான பயிர்ச்செய்கை தொடர்பாக கமத்தொழில் காணிகளை பயிர்ச் செய்கையின் பொருட்டு ஈடுபடுத்துதல், ஊக்குவித்தல் மற்றும் அவற்றை சிறந்த முறையில் ஈடுபடுத்தாத வயற்காணிச் சொந்தக்காரர் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய சட்ட ரீதியான நடவடிக்கைகள் தொடர்பாக 2009 ஆண்டு வெளியிடப்பட்ட 1585/15 என்னும் இலக்கமுடைய வர்த்தமானி மற்றும் 2000 ஆம் ஆண்டு இலக்கம் 46 உடைய கமநல அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கமத்தொழில் கொள்கைகளுக்கு அமைவாக கமத்தொழில் காணிகளை ஈடுபடுத்துவது தொடர்பாக 2009 ஆண்டு வெளியிடப்பட்ட 4/2009 ஆம் இலக்கமுடைய சுற்றுநிருபத்திற்கமைய 6632.68 ஏக்கர் தரிசு நிலங்களை பயிர்ச்செய்கை பண்ணுவதற்கு வாய்ப்புக் கிடைத்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

வயற்காணிகளை வேறு தேவைகளின் பொருட்டு ஈடுபடுத்துவது தொடர்பாக 2008 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25 ஆந் திகதி மற்றும் ஒக்டோபர் மாதம் 02 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்திற்கமைய " நாம் பயிரிடுவோம் - நாட்டைக் கட்டியெழுப்புவோம் 2007 - 2010 " உள்ளுர் உணவு உற்பத்தியை ஊக்குவிக்கும் தேசிய கடப்பாட்டின் பொருட்டு பயிர்ச்செய்கை பண்ணக்கூடிய ஒவ்வொரு அங்குல நிலத்தையும் பயிர்ச்செய்கை பண்ணும் நோக்கில் விடுக்கப்பட்ட தடை உத்தரவின் கால எல்லை 31.12.2010 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதுடன், 02.10.2008 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானித்திற்கமைய செயற்படுத்தப்பட்ட விவசாய அமைச்சின் குழு மூலம் அத்தியாவசிய விடயங்களின் பொருட்டு மட்டும் வயற்காணிகளை வேறு தேவைகளின் பொருட்டு ஈடுபடுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டில் வயற்காணிகளை வேறு தேவைகளின் பொருட்டு ஈடுபடுத்துவதற்கு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் அடங்கிய 240 கோவைகள் பிரதான காரியாலயத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன், 2010 ஆம் ஆண்டின் பொருட்டு நடைபெற்ற ஒரேயொரு விவசாய அமைச்சின் குழுவான 19.03.2010 ஆந் திகதிய குழுவிற்கு சிபாரிசு செய்யப்பட்ட 25 கோவைகள் சமர்ப்பிக்கப்பட்டதுடன், அவற்றில் 05 விண்ணப்பப்படிவங்களின் பொருட்டு குழுவின் அனுமதி கிடைக்கப்பெற்றதுடன், அவ் விண்ணப்பப் படிவங்கள் கௌரவ விவசாய அமைச்சரின் அனுமதியையும் பெற்றுக் கொள்ளப்பட்டது.

2010 ஆம் ஆண்டு மே மாதம் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு நிலைமையுடன் அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் 18.05.2010 ஆந் திகதி அலரி மாளிகையில் நடைபெற்ற இடர் நிவாரண நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடலின் போது தாழ்ந்த நிலங்களை நிரப்புதல் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும் என எடுக்கப்பட்ட தீர்மானத்துடன், வயற்காணிகளை வேறு தேவைகளின் பொருட்டு ஈடுபடுத்தல் மற்றும் வயற்காணியொன்று அல்ல என சான்றிதழ் வழங்கல் தொடர்பான நடவடிக்கைகளை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன், அது தொடர்பாக 7/11/3 என்னும் இலக்கமுடைய 25.06.2010 ஆந் திகதிய கடித மூலம் பிரதி/உதவி ஆணையாளர்களுக்கு அறிவூட்டப்பட்டுள்ளது. இருப்பினும் பிரதான காரியாலயத்திற்கு பொதுமக்களிடமிருந்து கிடைக்கப்பெறும் வேண்டுகோள்களின் அளவில் எவ்வித குறைவுகளும் ஏற்படவில்லை என்பது தெளிவாக உள்ளது.

## 9. கமநல வங்கி முன்னோடிக் கருத்திட்டம்.

**இக் கருத்திட்டத்தின் நோக்கம்**

1. கிராமிய விவசாயிகளின் வறுமையை ஒழிப்பதற்கு அவர்களுக்குத் தேவையான மூலதனத்தை உருவாக்கிக் கொள்வதற்கு உதவும் நிறுவனமாகக் கடமையாற்றல்.
2. விவசாயிகளின் சேமிப்புப் பழக்கத்தை அதிகரிப்பதற்கும் அதனூடாக அவர்களின் முதலீட்டுச் சக்தியை அதிகரிப்பதற்கும் உதவுதல்.
3. தங்கி வாழும் மட்டத்திலான கமத்தொழிலை வர்த்தக மட்டத்திலான நிலைக்கு உருவாக்குவதற்குத் தேவையான அறிவுரைகள் மற்றும் நிதி ரீதியான வசதிகளை உருவாக்கிக் கொடுத்தல்.
4. விவசாயிகளை ஒழுங்கமைத்து அவர்களின் நிதி மற்றும் பொருளாதார மட்டத்திலான சக்தியை அதிகரிப்பதற்கு அவகாசத்தை (வாய்ப்பினை) உருவாக்குதல்.
5. விவசாயிகளை சமூதாய ரீதியாகச் சிறந்த பலம் வாய்ந்த சமூகமாக உருவாக்குவதற்குத் தேவையான நிதி ரீதியான சக்தி மிக்க ஒரு சூழலைக் கட்டியெழுப்புதல்.

மேற்படி நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு நாடு பூராகவும் அமைக்கப்பட்டுள்ள 521 கமநல சேவைகள் நிலையங்கள் ஊடாக விவசாயிகளுக்குத் தேவையான நிதி வசதிகள் வழங்கப்படுகின்றது.

| தொ. இல. | மாவட்டம் | கமநல சேவைகள் நிலையங்களின் எண்ணிக்கை | அமைக்கப்பட்டுள்ள கமநல வங்கிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | கொழும்பு | 8 | 7 |
| 2 | கம்பஹா | 26 | 26 |
| 3 | களுத்துறை | 20 | 19 |
| 4 | கண்டி | 45 | 45 |
| 5 | மாத்தளை | 23 | 23 |
| 6 | நுவரஎலிய | 22 | 22 |
| 7 | காலி | 33 | 33 |
| 8 | மாத்தறை | 22 | 22 |
| 9 | அம்பாந்தோட்டை | 16 | 16 |
| 10 | குருநாகல் | 55 | 55 |
| 11 | புத்தளம் | 18 | 18 |
| 12 | அனுராதபுரம் | 40 | 40 |
| 13 | பொலொன்நறுவை | 13 | 11 |
| 14 | பதுளை | 31 | 30 |
| 15 | மொனறாகலை | 18 | 17 |
| 16 | இரத்தினபுரி | 30 | 30 |
| 17 | கேகாலை | 14 | 14 |
| 18 | அம்பாறை | 29 | 28 |
| 19 | திருகோணமலை | 22 | 15 |
| 20 | மட்டக்களப்பு | 17 | 12 |
| 21 | வவுனியா | 8 | 6 |
| 22 | யாழ்ப்பாணம் | 15 | 15 |
| 23 | மன்னார் | 12 | 8 |
| 24 | முல்லைத்தீவு | 10 | 4 |
| 25 | கிளிநொச்சி | 8 | 5 |
| | **மொத்தம்** | **556** | **521** |

- கமநல வங்கி முன்னோடிக் கருத்திட்டத்தில் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளும் உறுப்பினர்கள் தொடர்பான விபரங்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

மொத்த பங்குதாரர்களின் எண்ணிக்கை - 316,394

மொத்த சேமிப்புக் கணக்குகளின் எண்ணிக்கை - 128,728

மொத்த குழுக் கணக்குகளின் எண்ணிக்கை - 20,638

- கமநல வங்கி முன்னோடிக் கருத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும் கடன் வகைகள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

1. விவசாய பயிர்ச்செய்கைக் கடன்,
2. நெல் அறுவடைக் கடன்,
3. நெல் அறுவடைப் பாதுகாப்புக் கடன்,
4. விவசாய இயந்திர உபகரணக் கடன்,
5. கருத்திட்டக் கடன்,
6. கமக்காரர் ஓய்வூதிய காப்புறுதிக் கடன்.

- கமநல வங்கியினால் வழங்கப்படும் கடனின் பொருட்டு வருடாந்த வட்டி வீதம் 9% என்பதுடன், பங்கு மற்றும் சேமிப்பு வைப்புகளின் பொருட்டு செலுத்தப்படும் வட்டி வீதம் 01.07.2010 ஆந் திகதி தொடக்கம் 7.5% இலிருந்து 5% வீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

31.12.2010 வரை கடன் வழங்கல் மற்றும் அறவீடுகள் தொடர்பான முன்னேற்றங்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

| தொடர் இலக்கம் | விபரங்கள் | 1998 ஆந் திகதி தொடக்கம் 2010.12.31 ஆந் திகதி வரை |
|---|---|---|
| 1 | கடன் வழங்கல் | 3,535,065,432 |
| 2 | கடன் அறவீடு | 3,082,964,720 |
| 3 | மேலும் அறவிட வேண்டியுள்ள நிலுவை | 452,100,712 |
| 4 | கடன் அறவீட்டின் முன்னேற்றம் | 87% |

- 31.12.2010 ஆந் திகதிக்கு ஒன்றிணைக்கப்பட்ட கமநல வங்கி முன்னோடிக் கருத்திட்டத்தின் நிதி நிலை தொடர்பான தகவல்களின் ஒரு பகுதி கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

| விடயங்கள் | நிலுவை (ரூபா) |
|---|---|
| சேமிப்பு மற்றும் நிலையான கணக்கு | 407,712,374 |
| நடைமுறைக் கணக்குகளின் மிகுதி | 42,352,537 |
| கையிருப்பு | 2,255,685 |
| கடனாளிகள் | 452,100,712 |
| விவசாயிகளின் பங்குப் பண கட்டுப்பாட்டுக் கணக்கு | 121,175,870 |
| மூலதனக் கணக்கு | 283,426,980 |
| விவசாயிகளின் சேமிப்புகளின் கட்டுப்பாட்டுக் கணக்கு | 158,343,497 |
| விவசாயிகளின் குழுக் கணக்குகளின் கட்டுப்பாட்டுக் கணக்கு | 57,300,447 |

## 10. போக்குவரத்துப் பிரிவு

2010 ஆம் வருடத்தில் திணைக்களத்தின் மூலம் செயற்படுத்தப்பட்ட சகல அபிவிருத்தி வேலைகள், சட்ட மூலமான செயற்பாடுகள் மற்றும் நிர்வாக மூலம் கையளிக்கப்பட்ட பல்வேறு உத்தியோகபூர்வ போக்குவரத்து நடவடிக்கையின் பொருட்டு, போக்குவரத்துப் பிரிவினால் பாரிய பங்களிப்பு வழங்கப்பட்டது. இதன் பொருட்டு இலகு வாகனங்களான ஜீப், டபள் கப் மற்றும் மோட்டார் சைக்கிள், லொறி வண்டி, டென் வீல் மற்றும் பிரையிம் முவர் வண்டி உட்பட்ட 104 வாகனங்கள் இத்திணைக்களத்திற்கு சொந்தமாகவுள்ளது. இவ்வாகனங்களில் மிகவும் பழைய வாகனங்கள் உள்ளதால், அடிக்கடி ஏற்படும் திருத்த வேலைகள் மற்றும் பாராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு மேற்படி விடயங்களுக்கும் எவ்விதமான பாதிப்புகளும் ஏற்படா வண்ணம் தேவையான போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

இதற்கு மேலதிகமாக பிரதான காரியாலயம் உட்பட சகல மாவட்ட அலுவலகங்களிலும் உள்ள வாகனங்களினது சகல பராமரிப்பு, திருத்த வேலைகள், எரிபொருளின் பொருட்டு ஒதுக்கீடுகளை ஒதுக்குதல், வருமான அனுமதிப்பத்திரங்களை பெற்றுக் கொள்ளல், விபத்து, ஓட்டப்பதிவேடுகளை கணக்காய்வின் பொருட்டு சமர்ப்பித்தல், கணக்காய்வு ஐயவினாவின் பொருட்டு பதில்கள் வழங்குதல், வாகனக் காப்புறுதி, வருடாந்த மதிப்பீடு தயாரித்தல், போக்குவரத்து நடவடிக்கைகள் தொடர்பான தரவுகளை மேல் நிர்வாகத்திற்கு அறிக்கையிடல், எரிபொருள் கட்டளைகளை வழங்குதல், பற்றுச்சீட்டுக்களை செலுத்துதல் என்பன இப்பிரிவின் மூலம் நிறைவேற்றப்படுகின்றது.

**2010 வருடத்தின் பொருட்டு நிறைவேற்றப்பட்டுள்ள விடயங்கள்.**

1. உத்தியோகத்தர்களின் போக்குவரத்து நடவடிக்கைகள் - கொழும்பு மற்றும் மாவட்ட கடமைகளின் பொருட்டு.

2. திவிநெகும - நாடு பூராகவும் விதை விநியோகத்தின் பொருட்டு லொறி வண்டியை ஈடுபடுத்துதல்.
   (விதைப்பொதிகள் 15 இலட்சம் மற்றும் பசளை பொதிகள் 15 இலட்சமும் 03 வார கால குறுகிய காலப்பகுதியில் திணைக்களத்திற்குரிய 18 லொறி வண்டிகள் மூலம் பாதுகாப்பாக நாடு பூராகவும் விநியோகம் செய்யப்பட்டது.)

3. நாடு பூராகவுள்ள குளங்களின் புனரமைப்பு நடவடிக்கைகளின் புல்டோசர் மற்றும் எக்ஸ்கேவேட்டர் இயந்திரங்களை ஏற்றுச் செல்லும் பொருட்டு லொறி வண்டிகளை ஈடுபடுத்தல்.

4. வடக்கின் வசந்தம், கிழக்கின் உதயம், தரிசு நிலங்களை பயிர்ச்செய்கையில் ஈடுபடுத்துதல், விவசாய பயிர் வகைகளின் எதிர்வு கூறல் போன்ற பிரதான அபிவிருத்தி கருத்திட்டங்களின் பொருட்டுத் தேவையான போக்குவரத்து ஏற்பாடுகளை மேற்கொள்ளல்.

5. புத்தரசி விழா, தேசத்திற்கு மகுடம், உழவு விழா போன்ற தேசிய விழாக்களின் பொருட்டுத் தேவையான போக்குவரத்து ஏற்பாடுகளை மேற்கொள்ளல்.

6. சாரதி, சாரதி உதவியாளர்களின் வரவுப் பதிவேடு, விடுமுறைப் பதிவேடு, சம்பன ஆண்டேற்றங்களின் சிபாரிசு, மேலதிகப் பிரயாணச் செலவுக் கொடுப்பனவு வழங்கல் போன்ற நடவடிக்கைகளும் இப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

"நாம் பயிரிடுவோம் - நாட்டைக் கட்டியொழுப்புவோம்"

உள்ளுர் உணவு உற்பத்தியை ஊக்குவிக்கும் தேசிய வேலைத்திட்டம் 2007 - 2010

## இணைப்பு 2.1

தரிசு வயற்காணிகளை பயிர்ச்செய்கையில் ஈடுபடுத்தும் வேலைத்திட்டம் - 2010 டிசம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையிலான முன்னேற்ற அறிக்கை

ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டுப் பணம். மி. ரூபா 110

கமநல அபிவிருத்தித் திணைக்களம்

| மாவட்டம் | செலவுத் தலைப்பு | பயிர்ச்செய்கை பண்ணப்பட்ட ஏக்கர் அளவு | பயனடையும் குடும்பங்களின் எண்ணிக்கை | மதிப்பீட்டின் மொத்தப் பெறுமதி | உண்மையான செலவு 31.12.2010 ஆந் திகதிக்கு ரூபா | 2010 இல் மாவட்டத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ள ஒதுக்கீடு ரூபா | நிதி முன்னேற்றம் | பௌதீக முன்னேற்றத்தின் சதவீதம் (பொதுவான) | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | சிறு நீர்ப்பாசனங்களின் புனரமைப்பு % | காடு துப்பரவு | களை நாசினி இடல் | நிலத்தைப் பண்படுத்தல் | விதைத்தல்/ நாற்று நடல் |
| கொழும்பு | 118-2-3-20-2502 | 658 | 809 | 7,556,303.97 | 6,448,584.91 | 11,145,825.00 | 58% | 100% | - | - | - | - |
| கம்பஹா | 118-2-3-20-2502 | 1213 | 1737 | 8,544,012.42 | 8,753,661.87 | 8,619,065.00 | 102% | 96% | 94% | 100% | 90% | 97% |
| களுத்துறை | 118-2-3-20-2502 | 498 | 779 | 5,233,945.80 | 4,751,463.60 | 4,885,790.00 | 97% | 100% | 100% | 100% | 100% | 100% |
| கண்டி | 118-2-3-20-2502 | 192.5 | 282 | 5,576,472.04 | 3,099,949.17 | 5,515,515.30 | 56% | 58% | 53% | 88% | 66% | 66% |
| மாத்தளை | 118-2-3-20-2502 | 107 | 150 | 3,430,049.89 | 3,356,043.72 | 3,382,011.80 | 99% | 98% | - | - | - | - |
| நுவரஎலிய | 118-2-3-20-2502 | 123 | 429 | 4,936,195.86 | 4,933,186.59 | 5,037,600.00 | 98% | 100% | - | - | - | - |
| காலி | 118-2-3-20-2502 | 806.8 | 934 | 3,909,351.92 | 4,281,928.18 | 5,285,000.00 | 81% | 94% | - | 100% | - | - |
| மாத்தறை | 118-2-3-20-2502 | 618.1 | 615 | 4,668,760.58 | 4,456,182.68 | 4,830,000.00 | 92% | 100% | 100% | 100% | - | - |
| அம்பாந்தோட்டை | 118-2-3-20-2502 | 151 | 103 | 4,335,639.24 | 4,134,526.24 | 3,446,000.00 | 120% | 100% | - | - | - | - |
| யாழ்ப்பாணம் | 118-2-3-20-2502 | 690.1 | 552 | 3,000,000.00 | 2,760,293.32 | 2,760,293.32 | 100% | - | 100% | 100% | 100% | |
| மன்னார் | 118-2-3-20-2502 | 350 | 350 | 2,517,550.00 | 1,359,675.00 | 1,993,000.00 | 68% | - | 100% | 100% | 100% | 100% |
| வவுனியா | 118-2-3-20-2502 | 61 | 61 | 585,600.00 | 605,600.00 | 1,040,000.00 | 58% | - | 100% | - | - | - |
| முல்லைத்தீவு | 118-2-3-20-2502 | 260 | 260 | 1,500,000.00 | 2,371,090.44 | 2,390,000.00 | 99% | - | - | 100% | 100% | - |
| கிளிநொச்சி | 118-2-3-20-2502 | 207 | 264 | 1,359,990.00 | 1,379,977.00 | 1,730,950.00 | 80% | - | - | 100% | 100% | - |
| மட்டக்களப்பு | 118-2-3-20-2502 | 1438 | 889 | 4,960,260.00 | 4,960,260.00 | 4,148,000.00 | 120% | - | - | 100% | - | 100% |
| அம்பாறை * | 118-2-3-20-2502 | - | - | 52,470.00 | 52,470.00 | 52,470.00 | 100% | - | - | - | - | - |
| திருகோணமலை | 118-2-3-20-2502 | 361 | 135 | 5,043,424.00 | 3,787,536.00 | 3,190,000.00 | 119% | - | 100% | 100% | 100% | - |
| குருநாகலை | 118-2-3-20-2502 | 277 | 361 | 4,941,479.20 | 4,736,398.74 | 4,784,764.80 | 99% | 100% | - | - | - | - |
| புத்தளம் | 118-2-3-20-2502 | 583 | 712 | 8,526,045.54 | 8,498,000.00 | 8,498,000.00 | 100% | 100% | 100% | - | 100% | 100% |
| அனுராதபுரம் | 118-2-3-20-2502 | 488 | 368 | 8,004,378.96 | 7,773,153.00 | 8,463,205.00 | 92% | 100% | - | - | - | - |
| பொலொன்நறுவை | 118-2-3-20-2502 | 335 | 166 | 3,254,370.00 | 3,687,791.65 | 4,500,000.00 | 82% | 100% | - | 100% | - | - |
| பதுளை | 118-2-3-20-2502 | 180 | 350 | 7,307,726.66 | 5,413,579.52 | 7,271,368.00 | 74% | 94% | - | - | - | - |
| மொனறாகலை | 118-2-3-20-2502 | 162 | 91 | 5,352,000.00 | 4,546,702.50 | 4,860,000.00 | 94% | 100% | - | - | - | - |
| இரத்தினபுரி | 118-2-3-20-2502 | 125 | 242 | 1,652,259.76 | 1,713,204.10 | 1,440,000.00 | 119% | 96% | 88% | 78% | 93% | 100% |
| கேகாலை | 118-2-3-20-2502 | 78 | 183 | 1,923,302.60 | 2,095,562.74 | 2,387,324.27 | 88% | 100% | - | - | - | - |
| பிரதான அலுவலகம் | 118-2-3-20-2502 | | | | | 1,000,000.00 | | | | | | |
| மொத்தம் | 118-2-3-20-2502 | 9,963 | 10,822 | 108,171,588.44 | 99,956,820.97 | 112,656,182.49 | 89% | 96% | 94% | 97% | 95% | 83% |

* அம்பாறை மாவட்டத்தில் இவ் வேலைத்திட்டம் செயற்படாத நிலையில் உள்ளது.

## 2KR 2008 ஜப்பான் நன்கொடைத் திட்டத்தின் கீழ் கிடைக்கப்பெற்ற விவசாய இயந்திர உபகரணங்களை மாவட்டங்களுக்கு விநியோகித்தல்.

| மாகாணம் | மாவட்டம் | 04 சில்லு உழவு இயந்திரம் (சட்டிக் கலப்பையுடன்) | | 02சில்லு உழவு இயந்திரம்(கலப்பை, உதிரிப்பாகங்களுடன்) | | என்ஜினுடன் நீர்ப் பம்மி | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | மொத்தம் | | மொத்தம் | | மொத்தம் |
| மேல் மாகாணம் | 1 கொழும்பு | - | | 5 | | - | |
| | 2 கம்பஹா | - | | 10 | | - | |
| | 3 களுத்துறை | - | 0 | 10 | 25 | - | 0 |
| மத்திய | 4 கண்டி | - | | 20 | | - | |
| | 5 மாத்தளை | - | | 35 | | - | |
| | 6 நுவரஎலிய | - | 0 | 15 | 70 | - | 0 |
| தெற்கு | 7 காலி | - | | 10 | | - | |
| | 8 மாத்தறை | - | | 15 | | - | |
| | 9 அம்பாந்தோட்டை | 2 | 2 | 70 | 95 | 48 | 48 |
| வடக்கு | 10 யாழ்ப்பாணம் | 3 | | 20 | | 14 | |
| | 11 கிளிநொச்சி | 4 | | 32 | | 8 | |
| | 12 மன்னார் | 4 | | 36 | | 24 | |
| | 13 வவுனியா | 4 | | 24 | | 16 | |
| | 14 முல்லைத்தீவு | 4 | 19 | 40 | 152 | 10 | 72 |
| கிழக்கு | 15 மட்டக்களப்பு | 4 | | 80 | | 17 | |
| | 16 அம்பாறை | 4 | | 70 | | 58 | |
| | 17 திருகோணமலை | 4 | 12 | 94 | 244 | 44 | 119 |
| வடமேல் | 18 குருநாகலை | - | | 80 | | 53 | |
| | 19 புத்தளம் | - | 0 | 68 | 148 | 17 | 70 |
| வடமத்திய | 20 அனுராபுரம் | - | | 75 | | 37 | |
| | 21 பொலன்நறுவை | 2 | 2 | 50 | 125 | 24 | 61 |
| ஊவ | 22 பதுளை | - | | 45 | | - | |
| | 23 மொனறாகலை | - | 0 | 50 | 95 | 20 | 20 |
| சப்ரகமுவ | 24 இரத்தினபுரி | - | | 30 | | - | |
| | 25 கேகாலை | - | 0 | 20 | 50 | - | |
| | மொத்தம் | | 35 | | 1004 | | 390 |

**கருத்திட்டத்திற்கமைய மூலதனச் செலவு**

**செலவுத் தலைப்பு இலக்கம்: 281 கமநல அபிவிருத்தித் திணைக்களம்**
**நிகழ்ச்சித்திட்ட இலக்கம் மற்றும் பெயர்: 1 இயக்கம்**
கருத்திட்ட இலக்கம் மற்றும் பெயர்: பொதுவான நிர்வாகமும் தாபன சேவைகளும்.

| செலவு விடய இலக்கம் | பொ. இலக்கம் | நிதியியல் (குறிப்பீட்டு இலக்கம்) | பொருட் விபரம் | வரவு செலவு மதிப்பீட்டின் ஒதுக்கீடு | நி.பி. 66, 69 இற்கமைய வகை மாற்றம் | | மொத்த தேறிய ஒதுக்கீடு (1+2) | மொத்தச் செலவு | தேறிய விளைவு மிகுதி / (மிகை) (3-4) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | கூட்டப்பட்டது | கழிக்கப்படட்டது | | | |
| | | | | (1) | (2) | | (3) | (4) | (5) |
| | | | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **புனரமைப்பும் மேம்படுத்தலும்** | | | | | | | | | |
| 2001 | | 11 | கட்டடங்கள் | 15,000,000.00 | | | 15,000,000.00 | 14,918,129.28 | 81,870.72 |
| 2003 | | 11 | வாகனங்கள் | 9,500,000.00 | | | 9,500,000.00 | 9,499,625.83 | 374.17 |
| | | | **உப மொத்தம்** | **24,500,000.00** | | | **24,500,000.00** | **24,417,755.11** | **82,244.89** |
| **மூலதனச் சொத்துக்கள் சுவீகரித்தல்** | | | | | | | | | |
| 2102 | | 11 | தளபாடங்கள் மற்றும் அ/உபகரணங்கள் | 5,000,000.00 | | | 5,000,000.00 | 4,931,632.94 | 68,367.06 |
| | | | **உப மொத்தம்** | **5,000,000.00** | | | **5,000,000.00** | **4,931,632.94** | **68,367.06** |
| **கொள்திறன் கட்டுமானம்** | | | | | | | | | |
| 2401 | | 11 | பயிற்சி | 2,500,000.00 | | | 2,500,000.00 | 2,268,138.19 | 231,861.81 |
| | | | **உப மொத்தம்** | **2,500,000.00** | | | **2,500,000.00** | **2,268,138.19** | **231,861.81** |
| | | | **மொத்தக் கூட்டுத்தொகை** | **32,000,000.00** | | | **32,000,000.00** | **31,617,526.24** | **382,473.76** |

# கருத்திட்டத்திற்கமைய மூலதனச் செலவு

இணைப்பு: 3.2

செலவுத் தலைப்பு இலக்கம் : 281 கமநல அபிவிருத்தித் திணைக்களம்

நிகழ்ச்சித்திட்ட இலக்கம் மற்றும் பெயர் : 2 அபிவிருத்தி

கருத்திட்ட இலக்கம் மற்றும் பெயர்: 2 கமநல அபிவிருத்திச் சட்டத்தை செயற்படுத்தல்

| செலவு விடய இலக்கம் | பொ. இலக்கம் | நிதியியல் (குறியீட்டு இலக்கம்) | பொருட் விபரம் | வரவு செலவு மதிப்பீட்டின் ஒதுக்கீடு | நி.பி. 66, 69 இற்கமைய வகை மாற்றம் | | மொத்த தேறிய ஒதுக்கீடு (1+2) | மொத்தச் செலவு | தேறிய விளைவு/ மிகுதி(மிகை) (3-4) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | கூட்டப்பட்டது | கழிக்கப்பட்டது | | | |
| | | | | (1) | (2) | | (3) | (4) | (5) |
| | | | | ரூபா. | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **புனரமைப்பும் மேம்படுத்தலும்** | | | | | | | | | |
| 2001 | | 11 | கட்டடம் | 40,000,000.00 | | | 40,000,000.00 | 39,675,741.31 | 324,258.69 |
| 2002 | | 11 | இயந்திர உபகரணங்கள் | 10,000,000.00 | 1,587,000.00 | | 11,587,000.00 | 11,559,489.00 | 27,511.00 |
| 2003 | | 11 | வாகனம் | 10,500,000.00 | 840,100.00 | | 11,340,100.00 | 11,339,878.61 | 221.39 |
| | | | **உப கூட்டுத்தொகை** | **60,500,000.00** | **2,427,100.00** | | **62,927,100.00** | **62,575,108.92** | **351,991.08** |
| **மூலதனச் சொத்துக்கள் சுவீகரித்தல்** | | | | | | | | | |
| 2102 | | 11 | தளபாடங்கள் மற்றும் அ/உபகரணங்கள் | 10,000,000.00 | 7,000,000.00 | | 17,000,000.00 | 16,887,527.24 | 112,472.76 |
| 2103 | | 11 | இயந்திர உபகரணங்கள் | 15,000,000.00 | | 7,427,100.00 | 7,572,900.00 | 7,246,292.20 | 326,607.80 |
| 2104 | | 11 | கட்டடம் | 20,000,000.00 | | 2,000,000.00 | 18,000,000.00 | 14,812,329.60 | 3,187,670.40 |
| | | | **உப கூட்டுத்தொகை** | **45,000,000.00** | **7,000,000.00** | **9,427,100.00** | **42,572,900.00** | **38,946,149.04** | **3,626,750.96** |
| **ஏனைய முன்மொழிவுகள்** | | | | | | | | | |
| 8-2104 | | 11 | பசளைக் களஞ்சிய நிர்மாணம் | 60,000,000.00 | | | 60,000,000.00 | 59,680,204.36 | 319,795.64 |
| | | | **உப மொத்தம்** | **60,000,000.00** | | | **60,000,000.00** | **59,680,204.36** | 319,795.64 |
| | | | **மொத்தக் கூட்டுத்தொகை** | **165,500,000.00** | **9,427,100.00** | **9,427,100.00** | **165,500,000.00** | **161,201,462.32** | **4,298,537.68** |

**இணைப்பு: - 3.3**

**கமநல அபிவிருத்தித் திணைக்களம்**

**2010 டிசம்பர் 31 ஆந் திகதிக்கு அபவிருத்தி வேலைகளின் முன்னேற்றம்**

| இலக்கம் | மாவட்டம் | கிடைக்கப்பெற்ற ஒதுக்கீடு மி.ரூபா | வேலைகளின் எண்ணிக்கை | பணக் கொடுப்பனவு மி.ரூபா | விபரங்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | கண்டி | 50.00 | 212 | 48.60 | |
| 2 | பதுளை | 05.00 | 81 | 00.36 | |
| 3 | கேகாலை | 29.01 | 111 | 29.01 | |
| 4 | அனுராதபுரம் | 29.00 | 47 | 27.00 | |
| 5 | மாத்தளை | 58.43 | 109 | 54.11 | |
| 6 | கம்பஹா | 23.79 | 75 | 16.26 | |
| 7 | குருநாகலை | 00.98 | 01 | 00.19 | |
| 8 | நுவரஎலிய | 10.70 | 20 | 10.79 | |
| 9 | வவுனியா | 13.28 | 09 | 08.06 | |
| | **உப மொத்தம்** | **220.29** | **665** | **194.29** | |
| | **(மாவட்ட செயலாளர்கள் ஊடாக கிடைக்கப் பெற்ற ஒதுக்கீடு)** | | | | |
| 10 | பொலொன்நறுவை | 19.00 | 23 | 10.88 | |
| 11 | அம்பாந்தோட்டை | | 42 | 21.50 | |
| 12 | மாத்தறை | 03.90 | 01 | 03.90 | 2009 வருடத்திற்கு 15 மி.ரூ. கிடைக்கப் பெற்றுள்ளது. 2010 வருடத்திற்கு தொடர் வேலையாகவுள்ளது |
| 13 | குருநாகலை | 15.00 | 149 | 14.65 | |
| 14 | மன்னார் | 117.80 | 27 | 86.40 | |
| 15 | புத்தளம் | 15.00 | 149 | 14.65 | |
| 16 | களுத்துறை | 05.52 | 24 | 04.70 | |
| 17 | இரத்தினபுரி | 02.00 | 06 | 01.38 | |
| 18 | மொனறாகலை | 04.80 | 11 | 04.30 | |
| 19 | அம்பாறை | 09.39 | 10 | 07.25 | |
| 20 | கொழும்பு | 12.37 | 85 | 12.37 | |
| 21 | யாழ்ப்பாணம் | 23.31 | 16 | 22.51 | |
| 22 | கிளிநொச்சி | 59.59 | 30 | 59.59 | பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் Rap மற்றும் Eran அமைப்பிற்கு ஒதுக்கீடு வழங்கி இவ் வேலைகள் நிறைவேற்றப்பட்டுள்ளது. |
| 23 | வவுனியா | 20.88 | 08 | 04.76 | |
| | **உப மொத்தம்** | **308.56** | **581** | **268.84** | |
| | **2010 மொத்தம்** | **528.84** | **1246** | **463.13** | |